சத்துணவு
'ஜீவாகாரம்'
பக்கப் விலை 50/-
நான்கு மாதக்
குழந்தைகளிலிருந்து
கொடுக்கக் கூடியது
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106

பக்கங்கள் : ஆறு
Registered as a Newspaper
உதயன்
விலை
ரூபா
5-00
சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 17 ஞாயிற்றுக்கிழமை (30 04 1995) UTHAYAN A LiveLy National Tamil Daily கதிர் 154

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
பாவித்த வெற்றுப்
பைகளைக் கொடுத்து
இனாம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
அண்ணா
தொழிலகம்
இணுவில்
(சி-9106)

எமது கோரிக்கைகள் குறித்து அரசு நல்ல முடிவுகளை எடுத்து செயற்படுத்த முன் வந்தால் சமாதான வழிக்குத் திரும்பத் தயார்!

பி.பி.ஸி. பேட்டியில் தலைவர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 30

''விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் குறித்து அரசு நல்ல முடிவுகளை எடுத்து அவற்றைச் செயற்படுத்த முன்வந்தால் சமாதான வழிக்குத் திரும்பத் தயாராக இருக்கிறோம்.''

— இவ்வாறு தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிவித்திருக்கிறார்.

லண்டன் பி.பி.ஸி. யின் தமிழோசைக்கு வழங்கிய விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பி.பி.ஸி. செய்தியாளர் ஆனந்தி சூரியப்பிரகாசத்துக்கு கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்தில் வைத்து தலைவர் வழங்கிய பேட்டி நேற்று தமிழோசையில் ஒலிபரப்பானது. பேட்டியின் முழு விவரம் வருமாறு:-

கேள்வி:- தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும், வடக்கிலும் கிழக்கிலும் அமைதி, சமாதானம் ஏற்படும் என்றொரு நம்பிக்கை நாட்டில் பிறந்திருந்த வேளையில் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கையில் இருந்தும் சமாதானப் பேச்சுவார்த்தையில் இருந்தும் ஏன் விலகிக் கொண்டீர்கள்?

பிரபா:- தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்; தமிழர் தாயகத்தில் சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை எமது மக்களிடையே இடிந்துபோன சூழ்நிலையிலேயே நாம் இந்த வேதனைக்குரிய முடிவை எடுத்தோம்.

வட — கிழக்கில் சமாதானம் ஏற்படும்; இயல்புநிலை தோன்றும்; தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் ஆரம்பத்தில் எமக்கு இருந்தன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இணங்கினோம். இந்த நம்பிக்கையில்தான் ஆயுதப் போராட்டத்தை இடைநிறுத்தி, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டோம்.

சமாதானப் பேச்சுக்கள் கட்டம் கட்டமாக நடத்தப்படவேண்டும் என்றும் —

ஆரம்ப கட்டப் பேச்சுக்கள் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அவசரமான — அன்றாடப் — பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும் என்றும் நாம் வலியுறுத்தினோம்.

அரசும் அதற்கு இணங்கியது.

பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை, மீன்பிடித் தடை, என்ற ரீதியில் முந்திய சிங்கள அரசு விதித்த தடைகளால் நீண்டகாலமாக எமது மக்கள் பெரும் துன்பத்திற்கு ஆளாகி வந்தனர். இந்தத் தடைகளை நீக்கி, எமது மக்களின் துன்பத்தைத் துடைத்துவிடுமாறு நாம் கேட்டுக்கொண்டோமே தவிர, வேறு எதையும் கேட்கவில்லை.

தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவோம் என்ற கோஷத்துடன், ஆட்சிக்கு வந்த சந்திரிகா அரசு முந்திய ஆட்சியாளர்கள் திணித்து விட்ட இந்த அநீதிகளை, தாமாகவே நீக்கி விட்டிருக்கலாம். ஆனால் சந்திரிகா அரசு அப்படிச் செய்யவில்லை.

நாம் முன்வைத்த கோரிக்கைகளை தமிழ் மக்களின் பிரச்சினைகள் என்று பார்க்காமல், விடுதலைப் புலிகளின் நிபந்தனையாகக் கருதியது. அது மட்டுமல்ல; இந்தப் பிரச்சினைகளை இராணுவக் கண்

[6ஆம் பக்கம் பார்க்க]

படையினரின் சிதறுண்ட அவயவங்கள் 50 க்கும் அதிகமான யூரியா பைகளில்!

செஞ்சிலுவைச் சங்கத்தினால் சீ-டான்ஸரில் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 30

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால் நேற்று நவக்கிரியில் விழுந்து நொறுங்கிய விமானத்தில் பயணம் செய்து, உடல் சிதறுண்டு பலியான படையினர் அவயவத் துண்டங்கள்—

ஐம்பதுக்கும் மேற்பட்ட யூரியா உரப்பைகளில் கட்டப்பட்டுள்ளன.

இந்த உரப்பைகள் ''சீ-டான்ஸர்'' கப்பல் மூலம் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரால் இன்று திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

அவ்ரோ விமானம் மீதான தாக்குதலில் பலியானவர்களின் துண்டு துண்டான உடற்பாகங்கள் நேற்று இரவு யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப் பட்டிருந்தன.

இந்தச் சடலச் சிதறல்கள் 50 க்கு மேற்பட்ட யூரியா பைகளில் பொதிகளாகக் கட்டப் பட்டிருந்தன.

விடுதலைப்புலிகளால் செஞ்சிலுவைச்சங்கசர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப்பொதிகள் சுத்தப்படுத்துவதற்காகவே யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்

[6ஆம் பக்கம் பார்க்க]

சிதறிக் கிடந்த படையினரின் சதைத் துண்டங்களிடையே சற்று உருப்படியான நிலையில காணப்பட்ட ஒரேஒரு சடலம் இது தான். [ஐ]

பாதுகாப்பு சபை அவசரமாக கூடியது

கொழும்பு, ஏப். 30

நேற்றும், நேற்று முன்தினமும் இருஅவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தை அடுத்து தேசிய பாதுகாப்புச் சபை நேற்று இருதட

[6 ஆம் பக்கம் பார்க்க]

உதயன் நேற்றைய விசேட பதிப்பில் வெளியான செய்திகள் சிலவும் இன்றைய பத்திரிகையில் பிரசுரமாகி உள்ளன.

விமானம் எதுவும் நேற்று வானில் காணப்படவில்லை

குடாநாட்டின் தரைப்பகுதி மீது விமானங்கள் பறப்பது நேற்றுக் காலைக்குப் பின்னர் தடைப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்று முன்தினம் மாலை முதலாவது 'அவ்ரோ' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர், நேற்று முன்தினம் நள்ளிரவில் விமானம் ஒன்று பலாலி முகாமுக்கு வந்து நேற்று அதிகாலையில் திரும்பிச் சென்றது.

அதன் பின்னர் நேற்றுக் காலை பலாலி நோக்கி வந்த ''அவ்ரோ'' சுட்டு வீழ்த்தப் பட்டது. அதன் பின்னர் விமானங்களோ, ஹெலிகொப்டரோ குடா நாட்டின் தரைப் பகுதி மீது பறந்து செல்லவில்லை.

(உ)

கொல்லப்பட்டோரில் மூவர் பத்திரிகையாளர்

கொழும்பு,ஏப். 30

நேற்று சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானத்தில் மூன்று பத்திரிகையாளர்களும் இருந்தனர். —

அரச கட்டுப்பாட்டில் உள்ள லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிங்கள வார இதழான ''சிலுமின'' பத்திரிகையின் இணை ஆசிரியர் கருணாரட்ண, அப் பத்திரிகையின் செய்தியாளர்கள் பியசோமா, படப்பிடிப்பாளர் ஹெக்டர் வீரதுங்கா

[6ஆம் பக்கம் பார்க்க]

விழுந்து நொறுங்கிய ''அவ்ரோ'' விமானத்தின் சிதைந்த பாகங்கள் தீயில் எரிந்து கொண்டிருந்த காட்சி.

'ஒலிகன்' விமான எதிர்ப்பு பீரங்கியே தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 30

நேற்றும் நேற்றுமுன்தினமும் சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்கள் விடுதலைப் புலிகளின் விமானப்படை எதிர்ப்பு பீரங்கிப்படைப் பிரிவினராலேயே சுட்டுவீழ்த்தப் பட்டன.

நவீன தன்னியக்க 'ஒலிகன்' விமான எதிர்ப்பு பீரங்கியாலேயே இந்த விமானங்கள் சுடப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தவகை விமானஎதிர்ப்பு ஆயுதங்கள் விமானம் வெளிப்படுத்தும் வெப்பத்தைத் தேடிச் சென்று விமானத்தைத் தாக்கக் கூடியவை என்று இந்திய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

நேற்றைய சம்பவத்தில் விமானம் தாக்குதலுக்குள்ளான போது விமானத்தை

[6 பக்கம் பார்க்க]

நாளை மாபெரும் மே தினப் பேரணி

யாழ்ப்பாணம், ஏப் 30

உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்தை ஒட்டிய மாபெரும் பேரணி நாளை நடைபெறவுள்ளது.

மருதனார்மடம் சந்தியில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு பேரணி ஆரம்பமாகும்.

அங்கிருந்து பேரணி காங்கேசன்துறை வீதியூடாக நாச்சிமார் கோவிலடி வரை செல்லும், பின்னர் இராமநாதன் வீதி ஊடாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை பேரணி சென்றடையும்.

பின்னர் அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும்.

மேதினப் பேரணியை எழுச்

[6ஆம் பக்கம் பார்க்க]

வாழைத் தோட்டத்துக்குள்ளேயே விமானம் விழுந்து நொறுங்கியது!

நேற்று காலை தாக்குதலுக்கு இலக்கான அவ்ரோ விமானம் நவக்கிரிப் பகுதி வாழைத்தோட்டம் ஒன்றிலேயே விழுந்து வெடித்தது.

இதனால் அத்தோட்டம் கருகிய நிலையில் காணப்படுகின்றது.

சுமார் 500க்கு மேற்பட்ட வாழை மரங்கள் குலைகளுடன் சேதமடைந்துள்ளன.

வாழைத்தோட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் ஒரு பகுதியை சேதமாக்கியபடி விமானம் வாழைத் தோட்டத்திற்குள் விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

விமானம் விழுந்து நொறுங்கிய போது சுற்றாடலில் பெரும் வெப்ப அலை வீசியதாக அப்பகுதியில் குடியிருந்தவர்கள் தெரிவித்தனர்.

விழுந்து நொறுங்கிய விமானத்தை பார்க்க திரண்ட மக்கள் கூட்டம்

கையில் அகப்பட்டதை எடுத்துச் சென்றனர்

நேற்று காலை விழுந்து நொறுங்கிய ''அவ்ரோ'' விமானத்தின் பகுதிகளை எடுத்துச் செல்வதில் மக்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

விமானத்தின் துண்டுகளை எடுப்பதில் மக்கள் முண்டியடித்தனர். ஒவ்வொருவரும் கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு போனதைக் காணக் கூடியதாக இருந்தது.

விமானத்தின் பாகங்கள் வாழைத் தோட்டம் முழுவதிலும் பரவிக் கிடந்தன. மக்களின் பலரும் அலுமினியத் தகடுகளை மடித்து கற்களால் குத்தி எடுத்துச் சென்றதையும் காண முடிந்தது.

கடும் மழையையும், கடும் ஷெல் தாக்குதல்களையும் பொருட்படுத்தாது ஏராளமான மக்கள் விமானம் விழுந்த இடத்தைப் பார்க்கத் திரண்டனர். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்திருந்தனர்.

விமானத்தின் பாகங்கள் மட்டுமன்று அதில் பயணம் செய்தவர்கள் கொண்டு வந்த பொருள்களும் சிதறிக் கிடந்தன. படையினரின் கொமாண்டோ சீருடைகள் ''பிட்ற்றாக்குகள்'' சப்பாத்துக்கள் பெல்ற் மற்றும் உடுப்பு வகைகள் ஏராளமாகக் காணப்பட்டன.

படையினரின் ஆயுதங்கள் பலவும் உடைந்து சிதறிய நிலையில் காணப்பட்டன.

இதேவேளை இச்சம்பவத்தைத் தொடர்ந்து அச்சுவேலி, நவக்கிரி, பத்தமேனி, ஆவரங்கால், சிறுப்பிட்டி, புத்தூர் மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு இடம் பெயர்ந்தனர்.

இடம் பெயர்ந்து சென்றவர்கள் கூட சம்பவம் நடந்த இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

நவக்கிரிப் பகுதியில் என்றுமில்லாத சனக்கூட்டம் திரண்டிருந்தது, விமானம் விழுந்த சம்பவத்தைப் போல மக்கள் கூடியதும் ஒரு நிகழ்ச்சியாகும். (அ-ஐ 9-7-15)

விமானம் வீழ்த்தப்பட்டமை யுத்தத்தில் புதிய திருப்பம்

பலாலிக்கு அருகே படையினரின் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது ஈழ யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தப் போகின்றது என பி.பி.சியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி குறிப்பிட்டார்.

விமானத்தை வீழ்த்தும் ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடம் உள்ளன என்பது யுத்தத்தில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தப் போகின்றது.

இதுவரைகாலமும் நிலத்திலிருந்து வானுக்கு ஏவும்—விமான எதிர்ப்பு—ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடம் இல்லை என்றே கருதப்பட்டு வந்தது.

ஆனால் இப்போது அவர்கள் வசம் அது இருப்பது உறுதியாகியிருக்கின்றது.

பலாலிப் பகுதியில் அடுத்தடுத்த நாட்களில் இரு விமானங்கள் வீழ்த்தப்பட்டிருக்கின்றன.

வடக்கின் பிரதான முகாம்களில் இருக்கும் படையினருக்கு இரண்டு வழிகளில் இதுவரை விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஒன்று கடல்வழி மற்றையது வான்வழி.

தமது கடற்படைப் பலத்தைத் தீவிரப்படுத்தியதன் மூலம் படையினருக்கான கடல்வழி விநியோகத்தைப் புலிகள் ஓரளவு கட்டுப்படுத்தினர்.

இப்போது அவர்களிடம் ஏவுகணை இருப்பது படையினருக்கான வான்வழி விநியோகத்தையும் முடக்கிவிடக் கூடும்.

ஆகவே இன்று காலை விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம் இலங்கையின் பிரிவினை யுத்தத்தில் புதிய திருப்புமுனை ஒன்றை - தீவிரமான மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றது.

— இவ்வாறு ஜோர்ஜ் ஆர்னி மேலும் குறிப்பிட்டார்.

[உ]

ஹரியின் மகனே விமானி

நேற்று காலை பலாலிக்கு அருகே சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தைச் செலுத்திய விமானி தனது மகனே என முன்னாள் விமானப் படைத் தளபதி ஹரிகுணதிலக பிரெஞ்சு செய்தி நிறுவனமான ஏ. எவ். பிக்கு தெரிவித்துள்ளார்.

தமது மகன் ஸ்ரீயங்கா இந்த விமானத்தைச் செலுத்தினார் என்றார் அவர்.

(உ)

பூநகரி, ஆனையிறவு, பலாலி புலிகளால் தாக்கப்படலாம்

விடுதலைப்புலிகள் தம்மிடம் உள்ள ஏவுகணைகள் மூலம் வடக்கில் உள்ள பூநகரி, ஆனையிறவு, பலாலி இராணுவ முகாம்களுக்கு விமானம் மூலமும், கப்பல் மூலமும் உள்ள தொடர்புகளைத் துண்டிக்கும் நடவடிக்கையில் ஈடுபடக் கூடும் அப்படிச் செய்யமுடிந்தால் இம்முகாம்களின் மீதும் பெருந்தாக்குதல் நடவடிக்கையிலும் புலிகள் ஈடுபடக் கூடும்.

இவ்வாறு படைத்துறை வல்லுநர்கள் கருதுவதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

(உ-4)

நவீன போர் விமானங்களை படையினர் நாடக் கூடும்

விமானங்களைத் தாக்கும் ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் பயன்படுத்தத் தொடங்கியிருப்பதை அடுத்து ஸ்ரீலங்காப் படைகளும் பதிலுக்கு புதிய நவீன போர் விமானங்களை வாங்கக் கூடும் என அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

— இவ்வாறு வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

வடக்கு - கிழக்கு போர் முனையில் விமானப் படையின் உதவியால் ஓரளவு முன்னணியிலிருந்த படையினருக்கு புலிகளின் தற்போதைய ஏவுகணைத் தாக்குதல்கள் பெரும் பின்னடைவைத் தந்திருக்கின்றன இது போரின் போக்கையே மாற்றியமைக்கக் கூடும். — இவ்வாறு வெரித்தாஸ் வானொலி மேலும் குறிப்பிட்டது

[உ]

உ
சிவமயம்
சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்

இணுவையம்பதி காலஞ்சென்ற நாதஸ்வரமேதை
கோவிந்தசாமிபிள்ளை அவர்களின்
புதல்வர்கள்
இரத்தினகுமார், வாகீஸ்வரன்
ஆகியோரின் பத்து வருட ஆலய
மங்கள இசைச் சேவையைப் பாராட்டி
நடைபெறும்

பாராட்டு விழா

எதிர்வரும் **01 – 05 – 1995** திங்கட்கிழமை
பகல் 11-00 மணிக்கு
கோவிந்தசாமிபிள்ளை அவர்களின்
புதல்வர்கள்
நாதஸ்வர வித்துவான்கள்
இரத்தினகுமார், வாகீஸ்வரன்
ஆகியோருக்கு பாராட்டு விழா ஆலயத்தினரால்
நடத்தப்பட உள்ளது.

அவ்வமயம் அனைவரும் வருகை தருமாறு
அன்புடன் அழைக்கின்றோம்

நிகழ்ச்சி நிரல்

ஆசியுரை: முத்தமிழ்க்குருமணி
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குரு
தலைமை: திரு. மு செல்வஸ்தான்
(ஆசிரியர்)
பாராட்டுரை: திரு. ஆ. மகாலிங்கம்
(உடுவில் உதவி அரச அதிபர்)
பொற்பதக்கம் அணிதல்:
திரு சோ சோமசேகரம்
(இளைப்பாறிய அதிபர்)
திரு. கு நாகமுத்து
பொன்னாடை அணிதல்:
திரு, சி. நவரட்ணராசா
திரு ம. பாலகுமார்
பாராட்டுப்பத்திரம் வழங்கல்:
திரு. கு. பாலசிங்கம்
நன்றியுரை.

இங்ஙனம்:
ஆலய பிரதமகுரு,
தொண்டர்கள்,
சுன்னாகம் வாழ் மக்கள்.

ஸ்ரீ கதிரமலைச் சிவன்
தேவஸ்தானம்,
சுன்னாகம்.
(சி-5794)

பதவி வெற்றிடம்

மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரையறுள்ளது
ஆங்கில மருந்து விற்பனையாளர்

தகைமை: ஆங்கில மருந்து விற்பனையில் குறைந்தது ஒரு வருட அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

வயது: 20 — 30 வருடங்கள்

சுய விபரம்: கல்வி, சான்றுகளுடன் 12 5-95க்கு முன்னர் கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்
மருந்து, பால்மா வகைகள் (தனியார்)
வரையறுள்ளது
484, கேணல் கிட்டு சாலை,
[மருத்துவ மனை வீதி]
யாழ்ப்பாணம்.
[சி-1123]

வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி

DIPLOMA IN COMPUTER
PROGRAMMING
BASIC LANGUAGE

ஆரம்பம்

வார நாள் / வார இறுதி நாள்	பிரிவு 1	பிரிவு 2
05-05-1995	10-30	3-30
07-05-1995	9-00	4 00

★ சர்வதேச பாடத்திட்டத்திற்கு அமைய முற்றிலும் மாற்றி அமைக்கப்பட்ட பாடநெறி.
★ மாணவர்களின் வசதிக்கு ஏற்ப தனி/குழு வகுப்புக்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்
★ கூடிய செய்முறைப் பயிற்சியும் தவணை முறைக் கட்டண வசதியும்
★ சிறந்த மாணவர்களுக்கு மூன்று மாத காலம் இலவச உள்ளகப் பயிற்சி அளிக்கப்படும்.

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, ST. PETER'S LANE, JAFFNA.
[சி-1341]

திருநெல்வேலி
ஸ்ரீ நிலாயுதாக்ஷயம்பிகா சமேத
காயாரோகணேஸ்வர ஆலயம்
(திருநெல்வேலி – சிவன்கோவில்)
பூங்காவன உற்சவ விழா

காலம்:- 30 - 4 - 95 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மாலை 7.00 மணி

ஆலய உற்சவத்தின் போது நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி பரிசளிப்பும், தொடர் சமயச் சொற்பொழிவாற்றிய

தமிழருவி:- த. சிவகுமாரன்
அவர்களுக்கு விருது வழங்கலும் கௌரவமும் ஆலய
வழிபடுவோர் சபைத் தலைவர்

திரு சி. நாகராசா
தலைமையில் நடைபெறும்.

விருது வழங்கி கௌரவிப்பவர்:-
திரு. ஆ மகாலிங்கம்
(பிரதேச செயலர் உடுவில், உதவித் தலைவர்
இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்)

சிறப்புரைகள்:-
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
ஆறு திருமுருகன்
ஆகியோர் நிகழ்த்துவர் வித்தியா சாகர் அவர்கள் சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்குவார்.

அனைத்து அடியார்களையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

தேவஸ்தானம்
(சி- 1125)

உ
இந்துமத குருமார் ஒன்றிய மேதின பேரணி ஊர்வலம்

1-5-1995 மேதினத்தை முன்னிட்டு நடைபெற இருக்கும் பேரணி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் முகமாக அனைத்து குருமார்களும் 82, பிறவுண் வீதி நீராவியடி அமைப்பாளர் இல்லத்தில் பகல் 12 மணிக்கு சமூகம் தரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

நன்றி

சிவஸ்ரீ இ. மகேஸ்வரக்குருக்கள்
தலைவர், இந்துமதகுருமார்
ஒன்றியம்
யாழ். [illegible]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

மகாபொல
கொடுப்பனவு
1993 / 94
[2வது தவணைப்பணம்]

சிரேஷ்ட மாணவர்களுக்கான மகாபொல இரண்டாம் தவணைப் பணக் கொடுப்பனவு யாழ் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுக்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகைகளில் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.
(சி-1120)

மரண அறிவித்தல்கள்

சின்னத்தம்பி துரைசாமி

தொண்டைமானாற்றைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும், கொண்ட திரு. சின்னத்தம்பி துரைசாமி (மலேயன் பென்சனர்), 21-04-95 அன்று மலேசியாவில் காலமாகிவிட்டார்.

இவர் தேவரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சி. இரத்தினசிங்கம், (மலேயன் பென்சனர்) காலஞ்சென்ற செ. சொர்ணம்மா, காலஞ்சென்ற சி. குலசிங்கம், M B.E. (மலேயன் பென்சனர்), சி. பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 - 04 - 95 அன்று மலேசியாவில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றேன். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. பாலசிங்கம் [சகோதரன்]
நடுத்தெரு, தொண்டைமானாறு.
[36456]

திருமதி கமலாசனி தர்மரத்தினம்

திருமதி கமலாசனி தர்மரத்தினம் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையா தர்மரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா தர்மகுலசிங்கம் [ஜெயம்) - காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மல்லிகை என்பவர்களது மூத்த மகளும், இரவீந்திரன் (அவுஸ்திரேலியா), ஞானரத்தினம் (அவுஸ்திரேலியா), ராதிகா, ராகுலன் (மத்திய கிழக்கு), மல்லிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் மாலினி திருமுகம் (லண்டன்), மீனலோசனி பரமேஸ்வரனின் [அவுஸ்திரேலியா] அன்புச் சகோதரியும், சாந்தி, கலா, குமாரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. திலகரத்தினம்
[மைத்துனர்]
வேதாரணியர் வளவு,
உடுவில்- கிழக்கு
உடுவில்
[36467]

மு. கணபதிப்பிள்ளை தம்பிஐயா

தாவடி வடக்கு வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தம்பிஐயா நேற்றுச் சிவபதமடைந்தார். இவர் பிரபல புகையிலைத் தொழில் முகவரும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி பரமேஸ்வரி (கனடா), த. இராமநாதன் (யாழ் மாநகர சபை), த. கமலநாதன் (கனடா), திருமதி இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், செ. சிவஞானசேகரம் (கனடா), சி. செல்வராசா (காகித ஆலை வாழைச்சேனை). திருமதி ஜெகதீஸ்வரி (வசந்தா), திருமதி உசாயினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சகிலா, திலீப் (கனடா), சிவப்பிரியன், தர்ச்சனா, பபியா, அனுசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-04-95) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் மாலை 5 மணியளவில் தாவடி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தகவல்:
தம்பிஐயா (குடும்பத்தினர்)
வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(36469)

திருமதி சிவக்கொழுந்து வெற்றிவேலு

திருமதி சிவக்கொழுந்து வெற்றிவேலு நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் கிருஷ்ணபிள்ளை வெற்றிவேலுவின் அன்பு மனைவியும், கிருஷ்ணபிள்ளையின் [உதவித் தபாலதிபர் - யாழ்ப்பாணம்] அருமைத் தாயாரும், தனபாக்கியலட்சுமியின் அன்பு மாமியாரும், சிவபாக்கியம், மனோன்மணியம்மா [ஓய்வுபெற்ற ஆசிரியை], சண்முகசுந்தரம் [கனடா], காலஞ்சென்ற மாணிக்கவாசகர் [ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், தயாளினி [யாழ். பல்கலைக்கழகம்], நந்தினி, பவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [30-4-95] பிற்பகல் 3 மணிக்கு 86, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வெ. கிருஷ்ணபிள்ளை
[மகன்]
[36470]

கடற்படைக் கோட்டைக்குள் புகுந்து
கரும்புலிகள் நடத்திய சரித்திர சாதனை

ஏப்ரல் 18 ஆம் திகதி மாலை நேரம்.

திருமலை சினன்குடா துறை முகத்தின் ஆழங்குறைந்த துறை.

யுத்தம் நடக்கிறதோ இல்லையோ ஓய்வில்லாத பணிகளில் ஈடுபட்டு இளைத்துப் போன தோற்றம் காட்டியவாறு அந்த நான்கு பாரிய அதிவேக கடற்படைப் படகுகளும் அங்கு நங்கூரமிட்டு நிற்கின்றன.

நீண்டிருந்த துறைமுக மேடையின் ஒரு புறத்தில் "ரணசுருவும்", "சூரயாவும்" நிற்க மறுபுறத்தில் சமாந்தரமாக "ரணவிரு" "ஜகதா" ஆகிய இரண்டும் கட்டப்பட்டு நின்றன.

யுத்தப் பணிகளில் மட்டுமன்றி கடற்படை உயர் அதிகாரிகளின் உத்தியோக பூர்வ விஜயங்களுக்காவும் இந்தக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. அவ்வளவுக்கு பாதுகாப்பானவை எனக் கருதப்பட்டது

சராசரியாக இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றிலும்ஒரு கட்டளையிடும் அதிகாரி உட்பட 4 அதிகாரிகளும், 40 கடற்படைச் சிப்பாய்களும் அன்றாடம் கடமையில் ஈடுபட்டிருப்பது வழக்கம்.

அப்போது புதுவருட காலம் ஆதலால் பெரும்பாலான சிப்பாய்கள் விடுமுறையில் சென்றிருந்தனர்.

எஞ்சியோர் விடுமுறை கிடைக்காத விரக்தியில் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

புத்தாண்டு கொண்டாட்டம்

விடுமுறையில் செல்லாத படையினருக்காக அன்று இரவு கடற்படைத் தளத்தில் புத்தாண்டு கொண்டாட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடற்படையினர் பெரும்பாலானோர் அந்த நிகழ்ச்சியில்கலந்துகொண்டிருந்தனர். கடற்படை அதிகாரிகள் சுமார் 400 பேர் வரையானோர் தமது மனைவி பிள்ளைகள் சகிதம் அங்கு வந்திருந்தனர்.

விழாக் கோலம்

புத்தாண்டு நிகழ்ச்சியை ஒட்டி அப்பகுதி விழாக் கோலம்பூண்டிருந்தது. ஆடம்பர நிலையங்கள், மது பான நிலையங்கள் கூட அமைக்கப்பட்டிருந்தன.

இரவுநேரம் செல்லச்செல்ல புதுவருட விழா சூடேறத் தொடங்கியது.

சிங்கள 'பொப்' பாடல்களும், ஹிந்தி "ரப்" பாடல்களும் கடமையில் இருந்த சிப்பாய்களைக் கூட ஆட்டம் போட வைத்தன.

சரித்திரப் பிரசித்தி பெற்ற உலக யுத்தங்களின் போதே எவராலும் இலகுவில் அணுக முடியாமற் போன துறைமுகத்துக்குள் யார் நுழையப் போகிறார்கள்... என்ன செய்யப் போகிறார்கள் என்ற துணிவில் கடமையில் இருந்த சிப்பாய்கள் கூட கப்பல்களை விட்டு இறங்கி விழா நிகழ்ச்சிக்கு சென்று கலந்து கொண்டு குதூகலித்தனர்.

இன்னும் சில சிப்பாய்கள் உயரதிகாரிகள் கண்ணில் படாமல் மறைந்திருந்து விழாவை கண்டு ரசித்தனர்.

அவசர "ஹொட் லைன்" தொடர்பு

இரவு 9.20 மணி. அலரி மாளிகையில் இருந்து முப்படைத் தளபதிகளுடன் அவசர "ஹொட்லைன்" மூலம் ஜனாதிபதி தொடர்பு கொள்கிறார்.

"விடுதலைப் புலிகள் சமாதானப்பேச்சுக்களில் இருந்து விலகிக் கொள்வதாக தகவல் அனுப்பியுள்ளனர். எனவே படைகளை தயார் நிலையில் வைக்க உத்தரவிடுங்கள்."

— இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தளபதிகளைப் பணித்தார்.

அதனைத் தொடர்ந்து கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மொஹான் சமரசேகர திருமலைத் துறைமுகத்துடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார்

பின்னர் கிழக்குப் பிராந்திய கொமடோர் தயாசமிக கிரி கடற்படை அதிகாரிகளை அழைத்து அவசர கூட்டம் ஒன்றை நடத்தினார்.

திருமலை துறைமுகத்துக்கு உயர் அதிகாரிகள்

இரவு 11.30 மணி—

கிழக்கு பிராந்திய கடற்படை தளபதியும் இன்னும் சில அதிகாரிகளும் திருமலை துறைமுகத்துக்கு விஜயம் செய்தனர்.

கப்பல்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. "ரடார்கள்"பரிசோதனை செய்யப்பட்டன.

ஒரு உதவிக் கப்டனும் சிப்பாய்களும் கப்பல்களில் இருக்க வேண்டும் எனவும் 800மீற்றர் தூரத்துக்குள் "ரடார்" மூலம் எது வித சந்தேகத்துக்கு இடமான நடவடிக்கைகள் தெரிந்தாலும் தாக்குதல் நடத்தும்படியும் உத்தரவிடப்பட்டது.

உத்தரவுகளைப் பிறப்பித்து விட்டு அதிகாரிகள் புதுவருட விழாவில் தொடர்ந்து பங்கு பற்றிக் கொண்டிருந்தனர்.

இடிமின்னலுடன் பலத்த மழை

திடீரென மழை பெய்யத் தொடங்கியது இடியும் மின்னலுமாக பலத்த மழை கொட்டியது.

—கொட்டும் மழைக்கு மத்தியிலும் விழா கலகலப்புடன் தொடர்ந்து நடந்து நள்ளிரவுக்குப் பின் நிறைவு பெற்றது.

மழையில் நனைந்த படியே படையினர் தம் இருப்பிடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். —சிரிப்பும் கும்மாளமுமாக வாய் விட்டு பாடியவாறு அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

> முதலில் கொழும்பு கடற்படைத் தலைமையகத்துக்கு அவசரச் செய்தி பறந்தது. 'ரணசுரு' கப்பலில் இடி விழுந்து விட்டது என்பதே அந்தச் செய்தி!

மழையும் இடி மின்னலும் சற்று ஓய்ந்திருந்தது.

நள்ளிரவு தாண்டி சரியாக 12மணி 50 நிமிடம்.

அதிர வைக்கும் பெரும் வெடி ஓசை ஒன்று திருமலை நகரை ஒரு குலுங்குக் குலுக்கியது

300 அடி உயரத்துக்கு மேலெழுந்த தீப்பிழம்பு

அப்போது துறைமுகப் பகுதியினுள் பெரும் தீப்பிழம்பு ஒன்று சுமார் 300அடி உயரத்துக்கு மேல் எழுந்து அடங்கியது.

பெரும் இடி முழக்கமாக இருக்கலாம் என எண்ணிய கடற் படையினரை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த "ரண சுரு" கப்பலின் காட்சி உறைய வைத்தது.

"ரணசுரு" கப்பலின் கட்டளை இடும் அதிகாரியான லெப்டினன்ட் சுபசிங்க விடுமுறையில் சென்றிருந்ததால் அவருக்கு பதிலாக லெப்டினன்ட் வெல்லவாய அன்று கடமையில் ஈடுபட்டிருந்தார்.

பதறியபடி ஓடினார் அதிகாரி

கப்பலில் தீப்பற்றி எரிந்த காட்சியைக் கண்ட அவர் பதறியவாறு துறைமுகத் துறையை நோக்கி ஓடினார்.

பதில் தாக்குதல் நடத்துமாறு ஏனைய கப்பல்களில் இருந்த படையினரைப் பணித்தார். என்ன ஏது என்று அறிந்திராத படையினர் சகட்டு மேனிக்குத் தாக்கத் தொடங்கினர்.

கைக்குண்டுகள், பீரங்கி ஷெல்கள் வீசப்பட்டன. ஆனால் எந்தப் பக்கமாக இருந்தும் பதில் தாக்குதல் கிடைக்கவில்லை.

ஏமாற்றமடைந்த படையினர் தாக்குதலை நிறுத்தினர். அருகில் நின்ற கப்பல்ஒன்றில் இருந்து கொழும்பு கடற்படைத் தலைமையகத்துக்கு செய்தி பறந்தது.......

இடி விழுந்தது

"ரண சுரு கப்பலில் இடி விழுந்து விட்டது" என்பதே அந்தச் செய்தி

அந்தச் செய்தியை கடற்படைத்தலைமையகம் முற்றாக மறுத்தது.

நிச்சயமாக அது நீருக்கு அடியிலான ஒரு தாக்குதலாக இருக்கலாம் உடனடியாக ஏனைய கப்பல்களைத் துறைமுகத்துக்கு வெளியே அப்புறப் படுத்துமாறு அதிகாரிகளுக்கு தலைமையகத்தில் இருந்து உத்தரவிடப்பட்டது.

அதனை அடுத்து 'சூரயா' கப்பலின் கட்டளை இடும் அதிகாரியான லெப்டினன்ட் கொமடோர் எவ். எஸ். பி அசெல பெர்னாண்டோ அவசர அவசரமாக செயலில் இறங்கினார்.

கப்பல்களை விட்டு வெளியேறுமாறு சகல படையினருக்கும் உத்தரவிட்டார்.

குதித்து ஓடினர் படையினர்

அவ்வளவுதான் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு சிப்பாய்கள் கப்பல்களைவிட்டு குதித்தோடித்தப்பினர்.

ஆறு கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே நகர்த்தப்பட்டன. அவற்றின் பின்னால் "சூரயாவும்" "ஜகதாவும்" புறப்பட ஆயத்தமாகின.

அதிகாலை 1-15 மணி.

மீண்டும் பேரிடி ஓசையுடன் இரண்டாவது குண்டு வெடித்தது. காது செவிடுபடும் வெடி ஓசை துறைமுகப்பகுதியை உலுக்கியது

"சூரயா" கப்பல் தீப்பிழம்பாகியது தொடர்ந்து எரிந்து நீரில் மூழ்கியது.

தப்பிப்பிழைத்தது ஜகதா

அருகில் நின்ற "ஜகதா" கப்பல் தப்பிப் பிழைத்தது எனினும் அதற்கும் சேதம் ஏற்பட்டது. அதற்குள் இருந்த படையினர் கடலில் குதித்தனர்

அடுத்து என்ன நடக்கும் என்ற பீதி அதிகாரிகளை நிலைகுலைய வைத்தது சிலர் துறைமுகப்பகுதியை விட்டு தலைதெறிக்க வெளியே ஓடினர்.

தாக்குதலுக்கு இலக்கான இரு கப்பல்களும் எரிந்து நீரில் அமிழ்ந்து போயின.

கரும்புலித் தாக்குதலினால் அழிக்கப்பட்ட "ரணசுரு" "சூரயா" ஆகிய இரு கப்பல்கள் உட்பட நான்கு கப்பல்கள் சீனாவில் இருந்து 1972 ஆம் ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்டு கடற்படைக்கு வழங்கப்பட்டன.

அப்போது ஆட்சியில் இருந்த சிறிமாவோ பண்டார நாயக்கா தமது கணவரின் முதல் எழுத்துக்களில் தொடங்கும் பெயர்களை அந்த நான்கு கப்பல்களுக்கும் சூட்டினார்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. என்ற நான்கு எழுத்துக்களில் பெயர்கள் சூட்டப்பட்டன.

"சூரயா" கப்பல் தனது 23 வருட காலத்தில் மேற்கொண்ட யுத்தப் பணிகள் ஏராளமானவை.

"சூரயா"வுக்கு ஓய்வு

காரைநகர் தாக்குதல், வடமராட்சி தாக்குதல், 'ஒப்பரேஷன் யாழ். தேவி" போன்ற நடவடிக்கைகளின் போது படையினருடன் உற்ற துணையாக நின்று உழைத்தது.

அது இன்று ஓய்வு தேடி கடலின் ஆழத்துக்குச் சென்று விட்டது போலும்.

தாக்கி அழிக்கப்பட்ட இரண்டாவது கப்பலான "ரணசுரு" 1992ஆம் ஆண்டில்தான் சீனாவில் இருந்து பெறப்பட்டது.

வெற்றிலைக்கேணி தாக்குதலில் அரும்பணியாற்றி பெயர் பெற்று விட்ட திருப்தியில் அதுவும் அடங்கி விட்டது.

கடற் கரும்புலிகளால் தகர்க்கப்பட்ட இந்த இரு கப்பல்களும் வடமராட்சி கடற்பகுதியில் நன்கு பரிச்சயமானவை.

தமிழரின் உயிர்களை காவு கொண்ட கப்பல்கள்

தமிழ் மக்கள் பலரின் உயிர்களைக் காவு கொண்ட — ஏராளமான சொத்துக்களை அழித்த — பெரும் பொறுப்பு இந்த இரு கப்பல்களுக்கும் உண்டு.

தமிழர் வாழ்விடங்கள் மீது சதா குண்டு மழை பொழிந்து வந்த இந்த இரண்டு கப்பல்களும் இன்று தாமே குண்டுகளுக்கு இரையாகி விட்டன.

திருமலைத்துறை முகத்தினுள் ஊடுருவி கரும்புலிகள் நடத்திய தாக்குதலானது வெறுமனே இரு கப்பல்களை மட்டும் தகர்த்து விடவில்லை. அரசாங்கத்தையும், அரச படையினரையும், சிங்கள இனவாதிகளையும் நிலைகுலையச் செய்து விட்டது.

சிலையாக நின்றார் சந்திரிகா

இத்தாக்குதல் பற்றிய செய்தி கிடைத்ததும் ஜனாதிபதி சந்திரிகா சிறிது நேரம் எதுவும் பேசாது சிலையாக நின்று விட்டார் என்று கொழும்பில் பேசப்பட்டது.

தாக்குதல் நடத்த மறு நாள் பகல் முழுவதும் ஜனாதிபதி பாதுகாபபுத் துறையினருடன் மாநாடுகளை நடத்தினார்.

பொறியியல் நிபுணர் குழு ஒன்று அவசரமாக திருமலைக்கு அனுப்பப்பட்டது.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

டிங்கியில் வந்த புலிகள்

"டிங்கி" எனபபடும் சிறு படகுகளில் மீனவர்கள் போன்று விடுதலைப்புலிகள் துறைமுகத்தினுள் வந்துள்ளனர் என்றும—

கப்பல்கள் நிறுத்தப்பட்ட இடங்களில் இருந்து 300 யார் தொலைவில் "டிங்கி" களில் இருந்து நீரில் குதித்து நீந்திவந்திருக்க வேண்டும் என்றும் விசாரணைக்குழுவினர் கூறுகின்றனர்.

பரல்களில் அல்லது தங்கள் உடல்களில் கட்டி எடுத்து வந்த வெடிகுண்டுகளை கப்பல்களின் அடியில் பொருத்தியுள்ளனர்.

இரண்டு கப்பல்களையும் ஒரே நேரத்தில் வெடிக்க வைப்பதன் மூலம் அருகில் நின்ற "ஜகதா" கப்பலையும். துறைமுகத்தின் ஒரு பகுதியையும் சேதமடையச் செய்வதே புலிகளின் திட்டமாக இருந்தது. அதற்காகவே தற்கொலைப்படையினர் அனுப்பப்பட்டனர் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைக் குழுவினர் சில சந்தேகங்களையும முன் வைத்தனர்.

நீரின் மேல் எந்த அசைவையும் 'ரடார்கள்' காட்டிவிடும். ஆனால் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் "டிங்கி" படகுகளில் வந்து குண்டுகளை பொருத்தும் வரை "ரடார்கள்" இயங்கவில்லையா?

அல்லது ரடார்கள் அவதானிக்கப்படவில்லையா? துறைமுக பாதுகாப்பு ஏற்பாடுகள் சிறிது நேரம் கைவிடப்பட்டிருந்தனவா?

துறைமுகப் பகுதியில் அன்று இரவு புதுவருட விழா நடப்பது விடுதலைப் புலிகளுக்கு எவ்வாறு தெரிய வந்தது

இத்தகைய சந்தேகங்கள் விசாரணையாளர் மத்தியில் எழுந்துள்ளன.

தாக்கி அழிக்கப்பட்ட 'ரணசுரு' 12 கோடி ருபாவும், 'சூரயா' 15 கோடி ருபாவும் பெறுமதியுடையவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது;

ஆனால் 25 வருடங்களுக்கு மேல் கடற்படைக்காக உழைத்து விட்ட "சூரயா" கப்பலின் பெறுமதி தற்போது குறைவு என்று "விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்ற கதையாக அரசு கூறுகிறது.

இதேவேளை —

தாக்கி அழிக்கப்பட்ட இரு கப்பல்களிலும் திடீர் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய முன்னேற்பாடாக ஆயுதங்கள் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

ஆனால் எவ்வளவு உஷாராக இருந்தாலும் இவ்வாறான தாக்குதல்களை தடுக்க முடியாது.

நீரின் கீழ் நடமாட்டங்களை அவதானிக்கக் கூடிய சாதனங்கள் எதுவும் எம்மிடமில்லை.

நீரின் மேல் நடமாட்டங்களை அவதானிக்கும் 'ராடார்கள்' போன்று நீரின் கீழ் நடமாட்டங்களை அவதானிக்கும் 'சோனார்' கருவியை வாங்க முன்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இடையில் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததால் அது நிறுத்தப் பட்டுவிட்டது என்கிறார்கள் கடற்படையினர்.

மொத்தத்தில் படையினர் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட இதுபோன்ற கப்பல்களை விடுதலைப் புலிகள் வசம் இழந்து விட்டனர்.

இறுதியாக நடத்தப்பட்ட கரும் புலித் தாக்குதலானது கடற்படையினருக்கு மரண அடியாக அமைந்து விட்டது.

★

= இளவேந்தன் =

புலிகளின் குரல் வானொலியில்

30 — 04 — 1995

ஞாயிறு இரவு

- ★ 8-02 — மாவீரர்கள் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி— பகிரதி எழுதி "நீங்காத நினைவுகள்"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்— கருணைரவி எழுதும் "காணிநிலம் வேண்டும்" அங்கம்09

01 — 05 — 1995

திங்கள் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

ஞாயிறு மாலை

- ★ 5-01 — சிந்தனை சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — மழலைகளுக்காக
- ★ 5-30 — கதம்பம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — உங்கள் தெரிவு

மே நாள் பேரணி கூட்டம்:

கோட்ட, வட்ட ரீதியாக மக்கள் ஒன்றுகூடும் இடங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 30

நாளை நடைபெறவுள்ள மே நாள் பேரணி மற்றும் பொதுக் [கூட்ட ஏற்பாடுகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

கோட்ட, வட்ட ரீதியாக மக்கள் ஒன்றுகூடும் இடங்கள் வருமாறு:

★ வடமராட்சிக் கோட்டம் (கடற்புலிகள் பிரதேசம் உட்பட) — சுன்னாகம் திரமலைச் சிவன் கோவில்.

★ தென்மராட்சிக் கோட்டம்—உரும்பராய் ஞானவைரவர் கோவிலடி.

★ தீவகம் — உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கம்.

★ வலிகாமம் கோட்டம்—

அ) கோப்பாய் வட்டம் — உரும்பராய் சிவகுமாரன் நினைவாலயம்.

ஆ) உடுவில் தெல்லிப்பளை வட்டம் — சுன்னாகம் சந்தி.

இ) சங்கானை, சண்டிலிப்பாய் வட்டம் — கந்த ரோடை வீதி.

ஈ) யாழ். நல்லூர் வட்டம்—(கடற்புலிகள் உட்பட) — உடுவில் மகளிர் கல்லூரி.

★ வட்ட ரீதியாகப் புறப்படும் வாகனங்களுக்கு இலக்கமிடப்படும் இவ்வாகனங்கள் மக்களை இறக்கிய பின் மீளவும் பொதுக் கூட்டத்தின்பின் மக்களை ஏற்றுவதற்காகப் பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும்.

★ வடமராட்சிக் கோட்டம் (கடற்புலிகள் உட்பட) — திருநெல்வேலி பலாலி வீதி — கல்வியங்காடு வீதி.

★ தென்மராட்சிக் கோட்டம் — திருநெல்வேலி சிவன் கோவிலடி.

★ தீவகம்—பிறவுண் வீதி (கலட்டிச் சந்திக்குத் தெற்குப் பக்கம்)

★ யாழ்ப்பாணம்,உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், நல்லூர் வட்டம் (கடற்புலிகள் உட்பட)— நாச்சிமார் கோயிலடி.

கோப்பாய் வட்டம்— பொற்பதி வீதி, கொக்குவில்.

பொது மக்கள் வாகன இலக்கங்களைக் குறித்து வைத்து இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தாகசாந்தி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, நடமாடும் முதலுதவிப் பிரிவுகளும், மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம்

1) கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி.

2) திருநெல்வேலிச் சந்தை

ஊர்திகள் பேரணிப் பாதையில் இடையூறுகள் விளைவிக்காது இருக்கும் பொருட்டு பின்வரும் அளவுப் பிரமாணத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

நீளம் - 22 அடி, அகலம் - 10 அடி, உயரம் 12 அடி கூடுமானவரை [illegible] வரத்து தடை [illegible]தைத் தவிர்க்கும் பொருட்டு அளவுப் பிரமாணத்திற்கு அமைய இருத்தல் வேண்டும்.

ஊர்திகளுக்கு முன்னும், பின்னும் தயாரித்த அமைப்பின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

பேரணி ஆரம்பமாகும் முன்னர் வட்ட ரீதியாக மக்கள் ஒன்று கூடும் இடங்களிலிருந்து ஊர்திகள் புறப்பட்டு மக்களுடன் பேரணியிலகலந்து கொள்ள வேண்டும். ஊர்திகளில் தேவையற்ற ஒலி பெருக்கிப் பாவனை தவிர்க்கப்படவேண்டும்.

ஊர்திகளில் சாரதி, உதவியாளர், பாத்திரங்களில் நடிப்போர் தவிர மற்றையோர் அநாவசியமாக பயணிப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

கோட்ட ரீதியாகப் பின்வரும் இலக்கங்கள் ஊர்திகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கவேண்டும்.

வடமராட்சிக் கோட்டம் — வட/01 — 100வரை
தென்மராட்சிக் கோட்டம் — தென்/101 - 200வரை
வலிகாமம் கோட்டம் — வலி/201 — 400 வரை
தீவகம் கோட்டம் — தீவ/401 — 450 வரை
அனைத்துக் கடற்புலிகள் பிரதேசமும் — கட/450க்கு மேல்

ஊர்தி அமைப்பாளர்கள் கோட்டங்களில் தமக்கான இலக்கங்களை கோட்ட அரசி [illegible]

அனைத்து மக்களும் அணி திரள்வீர்!

பேரினவாத சக்திகளின் அடக்கு முறைகளுக்கெதிராக குரல் கொடுக்க அனைவரும் அணிதிரள்வோம் ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்காக போராடும் ஒரு தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கின்ற நாளாகமேதினப் பேரணி அமையட்டும்

பட்டாளிகள் தொழிலாளர்கள் மட்டும் இந்த மண்ணில் உரிமைகளை இழந்து நிற்கவில்லை ஒட்டு மொத்தமாக தமிழீழ மக்கள் உரிமைகளை இழந்து நிற்கிறார்கள்.

காலம் காலமாக ஸ்ரீ லங்காவை ஆட்சி புரிந்த பேரினவாத அரசுகள் தமிழ் மக்கள் மீது இராணுவ அழுத்தங்களை பிரயோகித்து வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டு தமிழ் மக்களின் சுதந்திரத்தை பறித்திருக்கிறார்கள்

தமிழ் மக்களின் நியாய பூர்வமான பிரச்சினைகளுக்கு விடுதலைப்புலிகளுடன் பேசித் தீர்வு காண்பேன் என சிங்கள மக்களின் ஆணைபெற்று ஆட்சி பீடமேறிய ஜனாதிபதி சந்திரிகா இன்று தனது உறுதி மொழிகளை காற்றில் பறக்க விட்டு மீண்டும் தமிழ் மக்கள் மீது இராணுவ அழுத்தங்களை கட்டவிழ்த்துவிட்டு இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கிறார். இவ்வாறான செயல்களினால் தமிழ் மக்கள் ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

பேரினவாத சிங்கள அரசியல்வாதிகளினால் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாது இனப்பிரச்சினைக்கு நீதியான அரசியல் தீர்வொன்றைக் காண முடியாது. அமைதி, சமாதானம், பேச்சுவார்த்தை என்று கூறிக் கொண்டு தமிழ் மக்களையும், உலகத்தையும் ஏமாற்ற மட்டும்தான் முடியும். இந்த வரலாற்று உண்மையை நாம் அனைவரும் சந்தேகத்துக்கிடமின்றி ஒப்புக் கொள்ள வேண்டும்.

எனவே சிங்கள அரசியல்வாதிகளை இனியும் நாம் நம்பி ஏமாந்து போய்விடாமல் தமிழ் மக்கள் அனைவரும் ஒரு கொடியின் கீழ் நின்று எமது சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும்.

1995 மேதின பேரணியில் லட்சக் கணக்கான மக்கள் அணிதிரண்டு உலகத்துக்கு ஒரு வேண்டுகோள் விடுப்போம். தமிழ் மக்களின் நீதியான சுதந்திர தேசிய விடுதலைப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டு தமிழீழ தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென உலக நாடுகளிடம் வேண்டுகோள் விடுப்போம்.

வெகுஜன
அமைப்புக்களின் ஒன்றியம்

குறிப்பிட்ட சில வீதிகள் போக்குவரத்துக்கு தடை

பேரணியில் கலந்து கொள்ளும் ஊர்திகள் - கலட்டிச் சந்தியில் இருந்து, யாழ் பல்கலைக்கழக கைலாசபிடி மைதானத்தை வந்து அடைய வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

பொதுக் கூட்ட மைதானத்தின் தாகசாந்தி ஏற்பாடுகளும், முதலுதவி மையங்களும் இயங்கும்.

மே நாளன்று மதியம் 1 00 மணிக்குப் பின்னர் மருதனார் மடச் சந்தி ஊடாக, காங்கேசன்துறை வீதி ஊடாக, மற்றும் நாச்சிமார் கோயில் சந்தி வீதி, கலட்டிச் சந்தி, பிறவுண் வீதி ஆகியவைகளில் போக்குவரத்து முற்றாகத் தடை செய்யப்படும்.

பொது மக்களது நலன் கருதியும், அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகவுமே ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இவ்வொழுங்கமைப்புக்கு இணங்க நடந்து கொள்வதன் மூலம், இவ்வருட மே நாளைச் சிறப்பாகக் கொண்டாட தமிழீழ மக்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும் என அரசியற் துறையினர் கேட்டுள்ளனர்

(ஒ)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

தக்காளி விதை, பசன் கன்று விற்பனைக்கு உள்ளது. Taste Line Industries (Pvt) Ltd 14 Seenier lane, Jaffna. [சி-1102]

ரீகண்டிசன் செய்யப்பட்ட பாவலனக்குரிய யன்மார் டீசல் என்ஜின் விற்பனைக்குண்டு. சி. அசோக்குமார், விஸ்வநாதர் வீடு, K. K. S. றோட், வல்வெட்டித்துறை. [36463]

இல. 65, [C 185] பிரதான வீதியில் 1½ பரப்புக் காணியில் அமைந்துள்ள நாச்சார வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ம. ச. ஜெயதேவன், இல. 105, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [36379]

நிலத்திற்குப் பதிக்கக்கூடிய ஒரு சதுர அடி வெள்ளை நிற மாபிள்கள் 300 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கம்பன் கோட்டம், இல. 300, கோயில் வீதி, நல்லூர். (சி-1100)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann White 3 கிழமை வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (36440)

உடன் விற்பனை

7' x4'' 6''x2'' 5''x4'' நங்கூன் தேக்கம் திராந்கின் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ப கிருஷ்ணன், பழைய ஆஸ்பத்திரியடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை (வட்டுக்கோட்டை சந்திக்கு அருகில்). [85 2]

மணமகன் தேவை

R C 30 வயது என்ஜினியருக்கும், குற்றமற்ற 38 வயது எக்கவுண்டனுக்கும், 32 36 37 வயது ஆசிரியருக்கும் தேவை மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம். [36231]

மணமகள் தேவை

தோம்பேயில் வேலை பார்க்கும் யாழ். இந்து யத 36 வயதுடைய பரணி நட்சத்திரம், நற்பழக்கம் உடையவருக்கு அழகிய மணப்பெண் தேவை. சாதகத்துடன் தொடர்பு: இல 788, மே/பா, உதயன் யாழ்ப்பாணம் [36146]

கணிதம் - 95

Distinction Credit பெறுபேறுடைய ஆரம்பத்திலிருந்து விசேடமாக (ஆண்டு 9 10 உட்பட) வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். B Sc ஆசிரியர் 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்பாக) திருநெல்வேலி 36464)

சுடிநீ [illegible]

சுடிநீ [illegible] வடிவமைக்கப்பெற்று வர்ணம் தீட்டப் பெற்றது. 500 மில்லிலீற்றர் பேப் மேலுறை/ சவலைத்தான் பெறப் பக்கற்றுகள் தருபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். ''மில்க்வைற்'' (சி-1111)

புலமைப் பரிசில்

ஆண்டு 3, 4, 5, க்கான புலமைபரிசில் மாதிரிப் பரீட்சை 30 04 95 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். வினாத்தாள் தேவையானோர் தொடர்பு கொள்ளவும். 219 நாவலர் வீதி, புதிய கல்வி நிலையம் யாழ்ப்பாணம். [36457]

காணவில்லை

21-4-95 வெள்ளிக்கிழமையில் இருந்து கறுப்பு நிறம், முலைக்காம்பு 5, பட்டிக்கொம்பு ஒருகொம்பு ஏறியும், மற்றக்கொம்பு இறங்கியும் உள்ள கறவைப் பசுவைக் காணவில்லை. காண்பவர்கள் அ. பிரேம்சந், 42/7, கரன் தியேட்டர் லேன், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்: சன்மானம் வழங்கப்படும். [36445]

நடனம்

நடனம் வினா-விடை பரதக் கலை தொடர்பான விவரங்கள் சிறுகுறிப்புகள் பரீட்சைக்குரிய வினா-விடைகள் கொண்ட நூல் வட இலங்கை சங்கீத சபைக்கு O/L, A/L வகுப்புக்குப் பயன்படும் வகையில் ஆக்கப்பெற்றது. ஆக்கம்: செல்வி 'நிலா' விற்பனையாகிறது. பூபால சிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-1310]

புலமைப் பரிசில் - 1995

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ப பயிற்சி வினாத்தாள்களும், வீட்டிலிருந்தபடியே படிக்க வசதியாக ஊக்குவிப்பு பயிற்சிகளும் விடைகளுடன் எம்மிடம் / புத்தக நிறுவனங்களில் / தபாலில் பெற்றுக் கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8484]

O/L MATHS

G. C. E. O/L இல் கட்டாய பாடமாகிய, கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், 28 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [8509]

யாழ். மாவட்ட

வங்கி ஊழியர் ஒன்றிய
மேதின அறிவித்தல்

மே நாள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொள்ளுமுகமாக அனைத்து வங்கி ஊழியர்களும் நண்பகல் 12 மணிக்கு இலங்கை வங்கி. ஆஸ்பத்திரி வீதிக் கிளைக்கு முன்பாக சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஊர்வலம் மருதனார்மடத்திலிருந்து பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகும்.

வங்கி ஊழியர் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(36459)

முக்கிய அறிவித்தல்

சகல தனியார் கல்வி, நிறுவன, பிரத்தியேக வகுப்பு நடத்துநர்கள் அனைவரையும் மே நாள் 1995 பேரணியில் கலந்து கொள்வதற்கு 01-05-95 அன்று பிற்பகல் 1-00 மணிக்கு மருதனார் மட இராமநாதன் கல்லூரி முன்றலில் ஒன்று கூடும்படி கேட்டுக் கொள்கிறோம். அனைவரதும் வரவு முக்கியமானது.

பொதுச்செயலாளர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்.

(சி-1109)

9-ம் ஆண்டு நினைவஞ்சலி

நாகமணி புவிராஜசிங்கம்

[இளைப்பாறிய பொலீஸ் சார்ஜன்ட்)

தோற்றம்:	மறைவு:
24 — 02 — 1918	08 — 05 — 1936

திதி: 30 - 01 - 1995

ஆண்டு ஒன்பது ஆகியும்-என்றும்
உம்மை மறவாது துடிக்கின்றோம்.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

சேனாதிராஜ முதலியார் வீதி,
தம்பாலை,
அச்சுவேலி.

(36441)

A/L 97 ஆரம்பம்: 30-04-95 [ஞாயிறு]

6-00	Pure — திரு முருகையா	7 00	Geography — திரு ஸ்ராலின்
7 00	App — திரு. முருகையா	8 00	Hinduism — திரு T. ஜெயக்குமார்
7-0	Zoo — திரு இந்திரன்	9-00	Hindu Cul திரு. T. ஜெயக்குமார்
8-00	Phy — திரு ஜெபசீலன்	10-00	Economics திரு. ஞானேஸ்வரன்
9-0	APp — திரு கணேசன்	11-00	Commerce — திரு [illegible]
9 00	Zoo திரு மகேந்திரன்	12-00	Accounts — திரு. பாலவாசன்
10 0	Bot — திரு S குமார்	1 00	Logic — திரு R. P சர்மா
10-0	Pure — திரு. கணேசன்	2 00	Tamil — திரு திருஞானம்
11-00	Che — திரு சிவநேசதி	3 00	Political — திரு. ஜெயம்

பொண்ட் (BOND) கல்வி நிறுவனம்

58A. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



ச. சாந்தி ஆண்டு 2
என்ட அம்மா அச்சா அம்மா. பள்ளிக் போது ஃப்ரூட்டிமிக்ஸ் கரைத்து தருவா!
V. Good 10/10
குளுக்கோஸ் மற்றும் "C" ஊட்டச்சத்தின் உற்சாகம்.....
fruitymix
உடன் பழச் சுவை பானம்
சுவையின் பசுமையான
TASTELINE

(1103)

நன்றி நவில்கிறோம்

அமரர் A. M. ஸ்பென்சர்

அவர்களின்

மரணச்சடங்கு ஆராதனையிலும், செபவழிபாட்டிலும் பங்குபற்றி, கண்ணீர் அஞ்சலி செலுத்தி, மலர் வளையங்கள் சமர்ப்பித்து, ஆழ்ந்த அனுதாபமும், உதவிகளும் நல்கிய மதிப்புக்குரிய தென்னிந்திய திருச்சபை உடுவில் போதகர்களுக்கும் ஆர்க்கன்னியாஸ்திரிகளுக்கும், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, ஹாட்லி கல்லூரி, தொழில் நுட்ப கல்லூரி, வட்டுக்கோட்டை ஆகியவற்றின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உறவினர், நண்பர்களுக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றி நவில்கின்றோம்.

தனித்தனியாக நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

பெறாமகள்: றூபினி ஸ்பென்சர்,
டோறா ஸ்பென்சர்,
உறவினர்.

ஆர்க் லேன்,
உடுவில்,

(36462)

தேவை

MC LEOD வைத்தியசாலை இணுவில்.

மேற்படி வைத்தியசாலைக்கு கீழ்க்காணும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

M. L. T:	Medical Laboratory Technologist — முழு நேரம் அல்லது பகுதி நேரம்.
சம்பளம்:	அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

வைத்திய அதிகாரி
MC LEOD வைத்தியசாலை,
இணுவில், சுன்னாகம்.

[சி-1115]

நீ சொன்ன வார்த்தைகள் நெஞ்சோடு
நிலவின்றி வான் மட்டும் துயரோடு

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:	மறைவு:
23 — 12 — 1924	11 — 05 — 1994

அமரர்

சின்னத்தம்பி பொன்னுச்சாமி

திதி: 30 — 04 — 1995

அன்பான எம் நெஞ்சின் ஒளி தீபமே!
நடமாடும் நின் வீட்டில் படமானாய்
கண்ணீரில் நாம் வாட ஏன் ஏகினாய்
வழி காட்டும் ஒளியாக நீ ஆகுவாய்
எம் விழியாகத் தான் நின்று வழி காட்டுவாய்.
உங்கள் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

[illegible]

[36439]

சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமா?

எழுத, பேச, வாசிக்க
பரீட்சையில் சித்தியடைய நாடுங்கள்

"A" LEVEL CENTRE

1ST. LANE, POINTPEDRO ROAD,
JAFFNA.

ஆரம்பம்: 06 - 05 - 1995
SAT & SUN 4 45 p.m.
Teacher **MISS A. ALISTA**

[சி-1344]

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
அனைத்து ஊழியர்களுக்கும்
மேதின ஊர்வல

அழைப்பு

எதிர்வரும் மே மாதம் 1ஆம் (01-05-95) திகதி நடைபெறவிருக்கும் மே தின ஊர்வலத்தில் அனைத்து ஊழியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்,

ஊர்வலம் பி, ப. 2-00மணிக்கு மருதனார் மடச் சந்தியிலிருந்து ஆரம்பமாகவிருப்பதால் சகல ஊழியர்களையும் பி. ப. 1-00 மணிக்கு முன்பு இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்

தலைவர்:
பொ. தங்கராசா,
சிமெந்து பொதுத் தொழிலாளர்,
யூனியன்.

(36466)

பதவி வெற்றிடம்

வில்லியம் ஹாவே (தனியார்) மருத்துவமனை

பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✶ வைத்திய அதிகாரி
- ✶ பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி

மேற்படி இரண்டு பதவி வெற்றிடங்களுக்கும் ஓய்வு பெற்ற வைத்தியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 1995-05-12 ஆந் திகதிக்கு முன்னர் தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பதவி வெற்றிடம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,
வில்லியம் ஹாவே தனியார்
மருத்துவமனை
இல. 17, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[சி-1122]

4-ம் வருட ஞாபகார்த்தம்

அமரர்

வே. க. கு. நல்லையாபிள்ளை

இலங்கை மண்ணில் முத்தாக	இந்திய மண்ணில் வித்தாக
19 — 05 — 1921	15 — 04 — 1991

திதி — 30 - 04 - 1995

நாங்கள் இருந்து நல்வாழ்வு வாழ்வதற்கு
நீங்கள் நின்று நல்வழியை காட்டாமல்
நீள்துயிலே நிம்மதி என்று நினைத்து தனியாக
நீண்ட வழி சென்ற மர்மமதையறியோமே.

ஆண்டவனின் சந்நிதியில் அணையாத
தீபமாய் ஒளி வீச வேண்டி நிற்கும்
குடும்பத்தினர்.

அரியாலை

[36465]

உதயன்
392/2 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

புதிய பரிமாணம்

நேற்றும், நேற்று முன்தினமும் ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு ''அவ்ரோ'' விமானங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டு வான் பகுதியில் எரிந்து வீழ்ந்து நொறுங்கின.

பதினாறு மணி நேர இடைவெளியில் நடைபெற்ற இந்த இரண்டு சம்பவங்களிலும் மொத்தம் 92 படையினர் கருகி மாண்டனர்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வரும் போரில் — மிகக் குறிப்பாக கடந்த ஐந்து வருடங்களாக மிகத் தீவிரமாக முழு அளவில் நடைபெற்று வரும் போரில் — இச்சம்பவங்கள் இரண்டும் புதியனவாகும்.

போர் விமானங்கள் இரண்டையும் விடுதலைப் புலிகளின் விமானப்படை எதிர்ப்பு பீரங்கிப் படைப் பிரிவு சுட்டு வீழ்த்தியமை வடக்கு - கிழக்குப் போரில் புதிய பரிமாணம் ஒன்றைத் தோற்றுவித்துள்ளது. இராணுவ ரீதியாக நோக்கும் போது இச்சம்பவங்கள் இரண்டும் புதிய திருப்பத்தையும் உண்டாக்கி விட்டன!

வடபகுதி மக்களைப் பொறுத்தவரை அரச படைகளின் விமானங்கள், கடந்த ஐந்து வருடங்களாக அவர்களின் உயிர்களைக் குடிக்கும் எமன்களாகவே விளங்கின. அவ்ரோ, பொம்மர், புக்காரா, சுப்பசொனிக் என்று பெரிய விமானங்கள் மட்டுமன்றி தும்பி போல சுற்றித் திரியும் ஹெலிகொப்டர்கள் கூட நூற்றுக்கணக்கான தமிழர்களை பலி கொண்டன.

வடக்கு - கிழக்கு வான் பகுதியில் தங்களை எதிர்க்க முடியாது என்ற ஏகபோக உரிமையுடன் அரச விமானப் படையினர் செய்த அனர்த்தங்கள் எண்ணிலடங்கா. வெள்ளி, சனிக்கிழமைகளில் அடுத்தடுத்து 2 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டமை அந்த நிலைமையை மாற்றி உள்ளது.

தரை, கடல் பகுதிகளைப் போலவே வான் பகுதியிலும் அரச படைகளின் தாக்குதல்களைத் தங்களால் முறியடிக்க முடியும் என்ற ஒரு புதிய நிலையை விடுதலைப் புலிகள் உருவாக்கி உள்ளனர். விடுதலைப் புலிகள் தாம் ஒரு விடுதலை இயக்கமாக இருந்த போதிலும் முப்படைப் பலம் கொண்ட அமைப்பு என்பதனை நேற்று முன்தினம் தொடக்கம் நிறுவியுள்ளனர்.

இதன் பின்னர், அரசாங்கத்தின் மூன்று படைகளையும் எதிர்கொண்டு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் வல்லமை கொண்ட விடுதலை இயக்கமாகவே விடுதலைப் புலிகள் களத்தில் நிற்கப்போகின்றார்கள்.

எனவே போர் தொடங்குமானால், வெள்ளிக்கிழமையுடன் தோன்றிய புதிய திருப்பமும், புதிய பரிமாணமும் இப்போதுள்ள தன நிலைமையை முற்றாக மாற்றிவிடும். இதனை அரசாங்கமும் உணர்ந்து செயற்படுமானால் நாட்டில் இரத்த ஆறு ஓடுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

விடுதலைப் புலிகளின் தரைப்படைப் பிரிவும், கடற்படைப் பிரிவும் [கடற்புலிகளும்] வளர்ச்சி கண்டு அரச படைகளுக்குப் பெரும் சவாலாகி விட்டது போலவே —

விமானப்படை எதிர்ப்புப் பிரிவும் அரசின் விமானப் படைக்குப் பெரும் சவாலாக வரும் என்பதில் சந்தேகமில்லை.

அப்போது வடக்கில் உள்ள தனது படை முகாம்களுக்கு உரிய ஆயுத, ஆளணி உணவு விநியோகங்களை மேற்கொள்வது கூட அரசுக்குக் கஷ்டமாகி விடலாம்.

எனவே, இராணுவ ரீதியில் தனக்குப் பலம் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டு அரசு போர் ஒன்றை பிரகடனப்படுத்தாது என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு உகந்ததல்ல என்பதனைப் பூரணமாக உணர்ந்த நிலையில், சந்திரிகா தமது சமாதானத் தேடலுக்கான முயற்சியை மீண்டும் தொடங்குவதே புத்திசாலித்தனமாகும். இரண்டு விமானங்கள் மீதான ஏவுகணைத் தாக்குதல்களை அதற்கான எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும்.

புலிகளின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்கான

விமானம் வெடித்துச் சிதறிய வேகத்தில் படையினர் உடல்கள் சின்னா பின்னம்!

கிழக்கு வானில் நேற்றுக் காலை 8 30 மணியளவில் அந்த விமானத்தை குடாநாட்டு மக்கள் கண்டனர்.

நேற்று முன்தினம் மாலை பலாலி விமானத் தளத்துக்கு அருகே முதல் ''அவ்ரோ'' விமானம் விழுந்து நொருங்கிய சம்பவத்தின் பின் முதல் முறையாக வான்பரப்பில் அந்த விமானமே சஞ்சரித்தது.

அதனாலோ என்னவோ பலரதும் கவனம் வழமைக்கு மாறாக அந்த விமானம் மீது திரும்பியது.

ஆனால் அந்த விமானத்தின் முடிவு நெருங்கி விட்டது என்பதை அப்போது யாருமே நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.

திடீரென்று தரையில் இருந்து கிளம்பிய பெரும் வெடி ஓசை வானைக் கிழித்துச் சென்றதையும்—

அந்த விமானம் கரும்புகையுடன் தீப்பற்றிய நிலையில் தள்ளாடித் தளம்பிப் பதிந்து சென்றதையும் கண்டவர்கள் வியப்பில் உறைந்து போயினர். வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது மாதிரியான சம்பவமாகவே இதுவும் இருக்கும் என்று பலர் எண்ணிக் கொண்டனர்.

தீப் பிழம்பாகத் திடீரெனச் சுழன்று குத்தென விழுந்த விமானம் சிதறிச் சுக்கு நூறாகப் பறந்ததைக் கண்டு திகைத்துப் போனேன் — என்கிறார் நவக்கிரி கிராம வாசி ஒருவர்.

இது போன்ற ஒரு காட்சியை நானோ எனது ஊரோ முன் எப்போதுமே கண்டதில்லை என்று எம்மிடம் கூறிவிட்டு அவசர அவசரமாக அவ்விடத்தை விட்டு அகன்றார் அவர்.

கொழும்பில் இருந்து புறப்பட்ட 54 படை அதிகாரிகளினதும், அவர்களைச் சுமந்து வந்த அந்த ''அவ்ரோ'' விமானத்தினதும் பயணம் நவக்கிரி பகுதியில் முடிவடைந்தது. அதுவும் மிகக் கோரமான முடிவு.

பிணக் காடாக நவக்கிரி

விமானம் விழுந்து நொருங்கிய நவக்கிரி பகுதிக்கு நாம் நேற்று முற்பகல் சென்ற போது ஒரு பெரும் பிணக் காட்டையே காணமுடிந்தது.

அதற்கு முன்பாக அச்சத்தின் காரணமாக அப்பகுதியை விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருந்த மக்களை வீதிகளில் காணமுடிந்தது.

அநேகமானோரின் முகங்களில் ஒரு வித பீதியும் அதே சமயம் வியப்பையும் அவதானிக்க முடிந்தது.

படையினரின் அகோரஷெல் தாக்குதலில் இருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வெளியேறிச்சென்று கொண்டிருந்த பலர், கூடவே தமது கைகளில் நொறுங்கிய விமானத்தின் சிறு பாகங்களையும் கொண்டு சென்ற காட்சி எம்மை வியப்பில் ஆழ்த்தியது.

நிலாவெளி வீதிக்கும் நவக்கிரி வீதிக்கும் இடையே பச்சைப்போர்வை அணிந்த வாழைத் தோட்டங்கள் அமைந்தபகுதி அது. அங்கேயே விமானம் விழுந்து சிதறியது.

குடிமனைகள் அரிதாகவே உள்ள அப்பகுதியில் இருந்த வீடுஒன்றின் மேலாகவே விமானம் விழுந்துள்ளது. அந்தவீடு பலத்த சேதமடைந்து காணப்பட்டது.

வாழைகள் தீயில் கருகிக் கிடந்தன. வாழைக்குலைகள் பல ஆங்காங்கே கருமை நிறத்தில் கிடந்தன.

கால் வைத்த இடமெல்லாம் சதைத் துண்டம்

நாம்சென்று பார்த்த போது விமானத்தின் சிதைவுகளில் இருந்து புகை கிழம்பியபடி இருந்தது.

மழை, ஷெல்லை பொருட்படுத்தாமல் நவக்கிரியில் திரண்டனர் மக்கள்

முகம் கொடுக்க முடியாத பிண வாடை. காலடி வைத்த இடம் எங்கும் சதைத் துண்டங்கள்.

விமானத்தின் எந்தப் பாகமும் உருப்படியாக இல்லை.

அதுவரை வானில் மட்டுமே அசுரனாக ஆனால் கம்பீரமாகப் பறந்து திரிந்ததையே பார்த்து வந்த நாம், அந்த விமானத்தை தரையில் முதன் முறையாக சுக்கு நூறாகிச் சுருண்டு போய் கிடந்ததைக் கண்டோம்.

சிறிது நேரத்துக்கெல்லாம் விமானத்தைப் பார்ப்பதற்காக பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் அப்பகுதிக்கு வந்து குவிந்தனர்.

விமானத்தின் சிதைந்த பகுதிகளில் ஏதாவது ஒன்றை பிடுங்கி எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம்.

உருப்படியான நிலையில் படையினரின் எந்த ஒரு சடலமும் காணப்படவில்லை வெறும் சதைத் துண்டங்கள் தான். குவியல் குவியலாக கிடந்தன.

படையினரின் சப்பாத்துக்கள், சீருடைப் பாகங்கள், ரீசேட்டுகள், உள்ளாடைகள், மற்றும் அவர்களது பாவனைப் பொருள்கள் என்று ஏராளமானவை வாழைத் தோட்டத்தில் சிதறிக் கிடந்தன.

இராணுவப் பைகள், வாசனைக் குப்பிகள், மதுப்புட்டிகள், மற்றும் விமானத்தபால் உறைகள் முத்திரைகள் என்பனவும் சிதைவுகளிடையே காணப்பட்டன.

படையினர் கொழும்பில் இருந்து எடுத்து வந்த சிங்கள மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளின் பிரதிகள் இரத்தம் தோய்ந்த நிலையிலும், தீயில் எரிந்த நிலையிலும் காணப்பட்டன.

அன்றைய (நேற்றைய) ''ஐலண்ட்'' பத்திரிகையின் பிரதி ஒன்றை நாம் எடுத்துக் கொண்டோம் இரத்தம் தோய்ந்திருந்தது.

படையினரின் டயறிகள், கோப்புக்கள் சிலவற்றையும் காணமுடிந்தது.

கருகிய ஆவணங்கள்

நேற்று முன்தினம் பலாலிக்கு அருகே கட்டுவனில் விழுந்துநொறுங்கிய விமானம் குறித்து விசாரணை நடத்த வந்த அதிகாரிகள் எடுத்து வந்த முக்கிய ஆவணங்கள் அவற்றினுள் இருந்திருக்கலாம் ஆனால் அவை தீயில் எரிந்து கருகிக்கொண்டிருந்தன.

படையினரின் தலைகளின் மேற்பகுதி மயிருடன் பிய்த்து வீசப்பட்டு ஆங்காங்கே கறுப்பு கறுப்பாகத் தெரிந்தன.

பல் துலக்கும் தூரிகைகள், சவர்க்காரம் என்பனவும் காணப்பட்டன.

சீருடை ஒன்றுக்கு அருகே அதிர்ஷ்டலாபச் சீட்டு ஒன்று கிடந்ததை அவதானித்தோம்.

அதிர்ஷ்ட லாபச்சீட்டுக்கு அதிர்ஷ்டம்!

கொழும்பில் வெளியாகும் லொத்தர் சீட்டுக்களில் ஒன்று என்பது அதை எடுத்துப் பார்த்தபோது தெரிந்தது அதை வாங்கிய படைச் சிப்பாயை விட அந்தச் சீட்டுக்கு அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. அதனால் தான் தீயில் அகப்படாமல் அது மட்டும் தப்பிவிட்டது போலும்.

சிதைவுகளிடையே மிக உன்னிப்பாக எதையோ தேடிக் கொண்டிருந்தவரிடம் ''கறுப்பு பெட்டியை'' தேடுகிறீர்களா என்று கேட்டேன்.

''அது எமக்குத் தேவை இல்லையே'' என்று சிரித்தபடி கூறினார் அவர்.

படையினர் சிலரின் சிறுடைப் ''பொக்கட்டு''களினுள் இருந்து பணத்தையும் சில போட்டோக்களையும் சிலர் எடுத்தனர்.

விமானத்தின் சக்கரங்கள் சிதைவடையாத நிலையில் காணப்பட்டன. அவற்றையும், விமானத்தின் சில பகுதிகளையும் விடுதலைப் புலிகள் அங்கிருந்து அப்புறப் படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

அதற்கு முன்பாகவே சிதறிய விமானத்தின் சுமார் 50 சதவீத பாகங்கள் பொதுமக்களால் பங்கு போடப்பட்டு விட்டன.

வயர்கள், உயர்ரக அலுமினியத் தகடுகளைக் கூட பலர் பிடுங்கி எடுத்துச் சென்றனர்.

ஷெல் தாக்குதல் தொடங்கியது

நாம் சம்பவம் நடந்தஇடத்துக்குச் சென்ற சுமார் 45 நிமிட நேரத்தினுள் பலாலி முகாமில் இருந்து படையினர் அகோர ஷெல் தாக்குதலை ஆரம்பித்தனர்.

கூவியபடி வந்த ''ஆட்லறி ஷெல்''கள் அடுத்தடுத்து நவக்கிரி, ஆவரங்கால் அச்சுவேலிப் பகுதிகளில் விழுந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன.

கொட்டும் மழையிலும் சம்பவம் நடந்த இடத்தில் திரண்டு நின்ற மக்கள் ஷெல் தாக்குதல்களை அடுத்து சிதறி ஓடினர்.

விமானம் அப்பகுதியில் வீழ்ந்து நொறுங்கிய போது பெரும் வெடி ஓசை கேட்டது என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

விமானத்தின் இறக்கைப் பகுதிகள் வானிலேயே வெடித்துச் சிதறியதையும் பலர் கண்டுள்ளனர்.

விமானம் விழுந்து நொறுங்குவதற்கு முன் ''பரசூட்'' மூலம் வெளியே குதிக்க சில படையினர் முற்பட்டிருக்க வேண்டும். விரிந்த நிலையில் இரு ''பரசூட்''கள் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

புதிய பரிமாணம்

விடுதலைப் புலிகளின்'விமானப்படை எதிர்ப்புப் பீரங்கிப் படைப் பிரிவினர்'சுமார் 16 மணிநேர இடைவெளியில் இலக்குத் தவறாமல் நடத்திய இரு தாக்குதல்களும் ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு புதிய பரிமாணத்தைக் கொடுத்து விட்டன.

புலிகளிடம் ஏவுகணைகள்

வடக்கு போர் முனையில் விமானப்படை விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தியை சர்வதேச செய்தி நிறுவனங்கள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு நேற்று முழு நாளும் வெளியிட்டன.

விமானங்களை வீழ்த்தும் ஏவுகணைகள் விடுதலைப் புலிகள் வசம் உள்ளன என்பது முதல் முறையாக வெளிக்காட்டப்பட்டிருப்பது யுத்தத்தில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தப்போகிறது என்று பீ. பி. ஸி. யின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்தார். அவர் மட்டுமல்ல இராணுவ பார்வையாளர்கள், அரசியல் நோக்கர்கள் ஏன் சாதாரண பொதுமக்கள் கூட அவ்வாறுதான் எண்ணுகின்றனர்.

அடுத்து என்ன நடக்கப் போகிறது என்பது தெரியாவிடினும் நாட்டின் ஒரு பகுதியில் அரசின் ஆகாய ஆதிக்கத்துக்கு விமானங்கள் மீதான இரு தாக்குதல்களும் சவால் விடுத்துள்ளன!

ஆகாய ஆதிக்கம் பறிபோனது

ஆரம்பத்தில் தரையிலும் பின்னர் கடலிலும் தங்கள் ஆதிக்கத்தை விடுதலைப் புலிகள் வசம் பறிகொடுத்து வந்த ஸ்ரீலங்கா படைத்துறை எஞ்சியிருந்த ஒரே மார்க்கமான ஆகாய ஆதிக்கத்தையும் பறிகொடுத்து விட்டது.

நேற்று முன்தினம் வெள்ளியன்று விடுதலைப் புலிகளால் ஏவுகணையால் தாக்கப்பட்ட முதலாவது 'அவ்ரோ' விமானம் கட்டுவனில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியிலே விழுந்து வெடித்தது. அதனால் அதனைப் பார்ப்பதற்கு மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் வசம் உள்ள பகுதியில் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு விடுதலைப் புலிகள் முழு உரிமை கோரியிருப்பது இதுவே முதல் முறையாகும்.

அத்துடன் விமானப்படை எதிர்ப்பு ''பீரங்கிப் படைப் பிரிவு'' என்ற பெயரில் விடுதலைப் புலிகளின் புதிய தாக்குதல் பிரிவு நடத்தியுள்ள முதல் தாக்குதல்களும் இவையே ஆகும்.

நல்லூர் தாஸ்

எனினும் சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ். கோட்டைப் பகுதியில் நடந்த சண்டையில் இத்தாலி தயாரிப்பான ''சியாமா செட்டி'' ரக பொம்மர் ஒன்றையும் —

பின்னர் ஆனையிறவு யுத்தத்தின் போது சீன தயாரிப்பான ''வை 8 '' ரக சகடை போர், விமானம் ஒன்றையும் புலிகள் சுட்டு வீழ்த்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே குறுகிய காலத்தில் மிகையான வளர்ச்சி கண்ட விடுதலைப்புலிகளின் கடற் புலிகள் படையினரின் கடல் வழித் தொடர்புகளை முடக்குவதில் வெற்றி வாகை சூடியுள்ளனர்.

கடற்புலிகளின் தாக்குதல்களில் இருந்து கடற் கலங்களை எவ்வாறு பாதுகாப்பது என்று தெரியாமல் படைத்துறை நிபுணர்கள் தங்கள் மண்டைகளைப் பிய்த்துக் கொண்டிருக்கிற நிலையில்—

விமானங்கள் மீதான புலிகளின் திடீர் பாய்ச்சல் அவர்களுக்கு உச்சி அடியாக அமைந்து விட்டது.

இவை எல்லாவற்றையும் விட விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவங்களானது தமிழர் போராட்டத்தை சர்வதேச மயமாக்குவதிலும் திருப்புமுனையை ஏற்படுத்தி விட்டன. ★

நவக்கிரியில் போர் விமானம் நொறுங்கி விழுந்த இடத்தில் எடுக்கப்பட்ட படம்

* * *

சூரியனின் ஒருபகுதி தீப்பிழம்பாக வீழ்ந்தது போன்று இருந்தது

விமானம் விழுந்ததை நேரில் கண்டவர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப் 30

சூரியனின் ஒரு பகுதி தீப்பிழம்பு போல எமது வீட்டுக்கு மேலால் வந்து கொண்டிருந்ததைக் கண்டு அவலக்குரல் எழுப்பிக் கொண்டு எதிர்த்திசையில் ஓடினேன். அதனால் உயிர்பிழைத்தேன்.

நேற்றுக் காலை அவ்ரோ விமானம் வானில் வெடித்துச் சிதறி நிலத்தில் விழுந்து நொறுங்கியதை நேரில் கண்ட செல்வி. சசிமதி இவ்வாறு கூறினார்.

புத்தூர், நவக்கிரி, பூவடி ஞானவைரவர் கோவிலடியில் அவ்ரோ விமானம் வீழ்ந்து சிதறிய வீட்டுக் குடியிருப்புக்கு அடுத்த வீட்டில் வசிப்பவர் இவர்.

''காலையில் வீட்டிற்கு மேலே விமான இரைச்சல் பெரியதாகக் கேட்டது. படத்தில் வீட்டு முற்றத்துக்கு ஓடி வந்து அண்ணாந்து பார்த்தேன். தீப்பிழம்பாக ஏதோ வீட்டுக்கு மேலால் வந்து கொண்டிருந்தது — இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (உ-11)

திருமலைக் கப்பல் தகர்ப்பு:

கடற்படையினரின் மேலும் மூன்று சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 30

திருகோணமலை கடற்படைக் கப்பல் தகர்ப்பில் காணமற்போன கடற்படையினரின் மூன்று கடற்படையினரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப பொறியியலாளர்களான பி. ஏ. பி. வணிகசுந்தர, ஆர். வி. சி. மொறடேன மற்றும் தொழில் பயிலுநர் ஜி கே விஜேந்திரா ஆகியோரின் சடலங்களே கண்டுபிடிக்கப் பட்டவையாகும்.

மற்றொரு தொழில் நுட்ப பொறியியலாளரான கே.கே. [illegible] தகவல் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

கள் சீவியவர் அதிர்ச்சியால் வீழ்ந்தார்

விமானம் வீழ்ந்து நொறுங்கிய இடத்துக்குச் சமீபமாக பனையில் கள்சீவிக் கொண்டிருந்த ஒருவரும் கீழேவிழுந்து காயமடைந்தார்.

விமானம் விழுந்த போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் இவர் கீழே விழுந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

காயம் அடைந்தவர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார். (இ-ஐ-9-7)

இருவர் கைது

கொழும்பு, ஏப்ரல் 30

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் மேலும் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர் என்றும்—

இவர்கள் இருவரும் சி.ஐ.டி யினரின் விசேடவிசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-14)

படையினர் அகோர ஷெல் தாக்குதல்

மக்கள் இடம் பெயர்வு

அச்சுவேலி, ஏப். 30

விமானம் வீழ்ந்து சிதறிய புத்தூர் நவக்கிரிப் பகுதிகளை நோக்கியும்—

பண்டத்தரிப்பு, விளான் அளவெட்டி, தெல்லிப்பளை பகுதிகளை நோக்கியும்— நேற்று பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

பண்டத்தரிப்பு, விளான் அளவெட்டி, தெல்லிப்பளைப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல்கள் அனேகமாக வயல் நிலங்களிலேயே விழுந்து வெடித்தன. இதனால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை

புத்தூர். நவக்கிரி பகுதியில் நேற்றுக்காலை 11. 00 மணிக்கும் நண்பகல் 12. 00 மணிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான ஷெல்கள் வீசப்பட்டன. இரட்டைத் தொடர்ச் ஷெல்கள் தொடர்ந்து வீழ்ந்து வெடித்தன.

நவக்கிரி நீற்றம்மாள் தேவாலயத்துக்குச் சமீபமாக நான்கு ஷெல்கள் விழுந்து வெடித்தன. ஆலயத்தடியில் நின்ற சி. பானுகோபன் [வயது 17] சி. பரமேஸ்வரன் (வயது 65) ஆகிய இருவரும் காயம் அடைந்தனர். விமானம் வீழ்ந்து நொறுங்கியதைப் பார்க்கச் சென்றவர்களில் இரு சகோதரர்களும் காயம் அடைந்தனர்.

சிவப்பிரகாசம் நாகபூசணம் (வயது 27) சிவப்பிரகாசம் சிற்சபேசன் (வயது 20) ஆகியோரே இந்த இருவரும் ஆவர். இவர்கள் இருவரும் நவக்கிரி புத்தூரைச்

[6ஆம் பக்கம் பார்க்க]

எமது கோரிக்கைகள்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) னோட்டத்துடன் அணுகியது! இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால் பாரதூரமான இராணுவ விளைவுகள் ஏற்படலாம் என்றும், தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் தோன்றலாம் என்றும் எமக்குக் கூறியது.

இந்தப் பதில்கள் எமக்கு ஏமாற்றத்தைத் தந்தன; அரசின் போக்கில் எமக்கு அவநம்பிக்கை தோன்றியது.

இந்த சூழ்நிலையில் தான் நாம் அரசுக்கு ஒரு காலக்கெடுவை வழங்கினோம் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை எனச் சுட்டிக் காட்டினோம்.

இந்த அழுத்தத்தின் விளைவாக சில தடைகளை நீக்கப் போவதாக அரசு உறுதி தந்தது. இந்த வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்துவதற்காக நாம் காலக்கெடுவை நீடித்து, அரசுக்கு மூன்று வார கால அவகாசம் கொடுத்தோம்.

அரசுதான் இழுத்தடித்தது

ஆனால் சில பிரச்சினைகளைப் பின் போட்டு இழுத்தடித்ததுடன் முடிவுகளை நடைமுறைப்படுத்தவும் தயங்கியது.

இந்த விடயத்தில் அரசு நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ளவில்லை.

பழைய சிங்கள அரசுகள் போன்று ஏமாற்று வித்தையைக் கடைப்பிடித்தது இதனால் எமக்கும் எமது மக்களுக்கும் சந்திரிகா அரசு மீதிருந்த நம்பிக்கை இடிந்து போயிற்று.

இதனால் சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வதில் அர்த்தமில்லை என்ற முடிவுக்கு நாம் வந்தோம்.

கேள்வி:- ஜனாதிபதி சந்திரிகா பொருளாதாரத் தடை, மீன்பிடித்தடை ஆகியவற்றை நீக்கி மேலும் பல சலுகைகளை வழங்க முன்வந்திருந்தார். அப்படியிருந்தும் நீங்கள் ஏன் சமாதானப் பேச்சுக்களிலிருந்து விலக முடிவு செய்தீர்கள்?

பிரபா:- நான் இங்கு ஒரு விடயத்தை வலியுறுத்த விரும்புகிறேன். வாக்குறுதிகள் வேறு; அவற்றை நடைமுறைப்படுத்துவது வேறு

ஜனாதிபதி சந்திரிகா சில வாக்குறுதிகளைத் தந்தார் என்பது உண்மை. ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

வாக்குறுதிகளைத் தருவது! பின்னர் செயல்படுத்தாமல் இழுத்தடிப்பது; ஒப்பந்தங்களைச் செய்வது பின் மீறுவது இப்படியாகத்தான் சிங்கள அரசுகள் காலம் காலமாக தமிழினத்தை ஏமாற்றி வந்தன. இது வரலாறு. சந்திரிகா அரசும் இதற்கு விதிவிலக்கானதல்ல.

கொடுத்த வாக்குறுதிகளையும் எடுத்த முடிவுகளையும் ஒரு குறித்த காலகட்டத்துக்குள் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்பதற்காகவே நாம் அரசுக்குக் காலக்கெடுவை விதித்தோம்.

நாம் எதிர்பார்த்ததுபோல சந்திரிகா அரசு எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்தது. எமது காலக்கெடுவை பாரதூரமான விடயமாக அவர்கள் கருதவில்லை. அதைத் தட்டிக் கழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

சலுகை எதையும் அரசு வழங்கவில்லை

அடுத்ததாக, புலிகளுக்கு சலுகைகளை வழங்கியதாக சந்திரிகா கூறுவது தவறு.

நாம் எமது மக்களின் பிரச்சினைகளை முன்வைத்தோமே தவிர, சலுகைகள் எதையும் கேட்கவில்லை.

உரிமைகள் சலுகைகள் அல்ல

மக்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை வழங்குவதை சலுகைகள் என்று சொல்ல முடியாது.

கேள்வி;- பொருளாதாரத் தடை நீக்கம் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவது நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக தாமதப்பட்டிருக்கலாம் நீங்கள் இன்னும் கொஞ்சம் பொறுமையாக இருந்திருக்கலாம் அல்லவா?

பிரபா:- நாம் பொறுக்கும் அளவுக்குப் பொறுத்துவிட்டோம். பொறுமையின் விளிம்புக்கு வந்து விட்டோம் என்றே சொல்லலாம்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பற்றிய விவகாரம் ஆறு மாதங்களுக்கு மேலாக இழுபட்டு வந்திருக்கிறது இந்தப் பிரச்சினைகள் குறித்து நான்கு சுற்றுப் பேச்சுக்களும் நாற்பதுக்கும் மேற்பட்ட கடிதங்களும் பரிமாறப் பட்டன.

இது போதாதென்று இரு வார காலக்கெடு என்றும், அதன் பின்னர் மூன்று வார காலக்கெடு என்றும் கால அவகாசம் கொடுத்தோம்.

இவ்வளவு காலமும் போதாது என்றா சொல்கின்றீர்கள்?

அரசுக்கு உண்மையில் மனமிருந்தால் 24 மணி நேரத்தில் தடைகளை நீக்குவதுடன் அவற்றைச் செயற்படுத்தியும் இருக்கலாம்.

அரசு உண்மையில் மனம் வைத்து செயற்பட்டிருந்தால் எந்தவித சிக்கல்களோ அல்லது தாமதங்களோ ஏற்பட்டிருக்காது என்றே நான் எண்ணுகிறேன்.

கேள்வி:- அரசு மீண்டும் இத்தடைகளை விதித்திருப்பது குறித்து உங்களின் உணர்வலைகள் என்ன?

பிரபா:- இந்த நடவடிக்கை ஒன்றைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது; அதாவது தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்டமட்டில், சந்திரிகா அரசுக்கும் பழைய ஐ.தே.க. அரசுக்கும் இடையில் அடிப்படை வேறுபாடுகள் இல்லை என்பதே.

முந்திய அரசுகள் இழைத்த அநீதிகளையே இந்த அரசும் தொடர்கிறது.

தமிழர் மீது பொருளாதார, இராணுவ அழுத்தங்களைத் திணித்து அதனால் அரசியல் லாபம் தேடுவதில் இரு அரசுகளுக்கும் மத்தியில் பெரும் வேறுபாடுகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இராணுவ நலனிலே அதிக அக்கறை

தமிழ் மக்களின் நலனில் இந்த அரசுக்கு உண்மையான அக்கறை இருந்தால், இந்தத் தடைகளை மீண்டும் விதித்திராது.

தமிழரின் அவலமான பிரச்சினைகளை, அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்துவதிலும், இராணுவ நலன்களைப் பேணுவதிலுமே அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையே இந்நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது.

கேள்வி:- மோதல் தவிர்ப்பு நடவடிக்கையின்கீழ் — உடன்படிக்கையை மீறுவதானால் — 72 மணி நேரம் கால அவகாசம் கொடுத்திருக்க வேண்டும். அந்தக் கால அவகாசத்தை அரசுக்கு நீங்கள் ஏன் கொடுக்கவில்லை?

பிரபா:- நாம் அரசுக்கு போதிய கால அவகாசம் கொடுத்தோம். காலக்கெடுவை விதித்து, பின்னர் அதனை நீடித்து, கிட்டத்தட்ட ஐந்து வாரங்கள் வரை கால அவகாசத்தை வழங்கினோம். எமது காலக்கெடுவின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் புரியாமல், காலக்கெடுவை அலட்சியம் செய்துவிட்டு இப்பொழுது எம் மீது வீண்பழி சுமத்த முனைகிறது அரசு

கேள்வி:- மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்தும் சமாதானப் பேச்சுக்களில் இருந்தும் நீங்கள் விலகிக் கொண்டதை அனைத்துலக நாடுகள் பல கண்டித்துள்ளன. புலிகள் சமாதானத்தை விரும்பவில்லை என்ற ஒரு கருத்து உலக அரங்கில் எழுந்துள்ளது இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பிரபா:- சர்வதேச உலகம் தமிழர் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது என்பதை நாம் அறிவோம். சமாதான வழி மூலம் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதிலும் அனைத்துலக நாடுகள் அக்கறை காட்டி வந்தன என்பதையும் நாம் அறிவோம்

ஆயினும் சமாதானப் பேச்சுக்களில் எழுந்துள்ள பிரச்சினைகள், பின்னடைவுகள், இழுபறிகள்பற்றியோ, சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்த காரணங்கள் பற்றியோ உண்மையான தகவல்கள் வெளியுலகுக்குச் சென்றடையவில்லை என்றே நினைக்கின்றேன்.

எமது நிலைப்பாட்டின் நியாயத்தை தெரிந்து கொள்ளாது அரசின் ஒரு தலைப் பட்சமான தகவல்களை மட்டும் நம்பி சில வெளிநாட்டு அரசுகள் விடுதலைப் புலிகளைக் கண்டித்துள்ளன. நிலைமையை ஆழமாகப்பார்க்காமல் அவசரப்பட்டு விடுக்கப்பட்ட இத்தகைய சம்பவங்கள் எமக்கு ஆழ்ந்த கவலையைத் தருகின்றது

கேள்வி:- புலிகளின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும் சரி கிடைக்காவிட்டாலும் சரி சமாதானம் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி சந்திரிகா தெளிவாகக் கூறியிருக்கிறார். இதற்கு உங்கள் பதில் என்ன?

பிரபா:- புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் சமாதானத்தை கொண்டு வருவது நடைமுறை சாத்தியமாயின், அவர்கள் முயற்சி செய்து பார்க்கட்டுமே!

சமாதான வழிக்கு திரும்ப....

கேள்வி;- சமாதானக் கதவுகளைப் புலிகள் முற்றாக மூடிவிடவில்லை என்று புலிகளின் லண்டன் சர்வதேச செயலகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகின்றது சமாதான முயற்சிகள் மீண்டும் தொடங்குவதற்கு அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

பிரபா:- எமது சமாதானக் கதவுகள் இன்னும் திறந்தே இருக்கின்றன.

அரசின் அணுகு முறையில் நாம் அதிருப்தியும் ஏமாற்றமும் கொண்டிருக்கிறோம் என்பது உண்மை

ஆனால் சமாதானத்தில் நாம் நம்பிக்கை இழக்கவில்லை. சமாதான வழிமுறைகள் மூலமாக தமிழரின் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு.

சமாதானத்துக்கான முன்முயற்சிகளை அரசே எடுக்க வேண்டும்.

எமது மக்கள் மீது மீண்டும் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார, மீன்பிடித் தடைகளை அரசு முதலில் அகற்றிவிட வேண்டும் இந்த தடை நீக்கத்தை நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும்.

இதனைப் புலிகளுக்கு வழங்கும் சலுகையாக நோக்காமல் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கருத வேண்டும்.

மற்றும் எமது கோரிக்கைகள் குறித்து நல்ல முடிவுகளை எடுத்து அவற்றை நடைமுறைப் படுத்த முன்வந்தால் போரை நிறுத்தி சமாதான வழிமுறைக்குத் திரும்ப ஆயத்தமாக இருக்கிறோம். — என்றார். (உ)

படையினர்...

(5ஆம்பக்கத் தொடர்ச்சி) சேர்ந்தவர்கள்.

கடும் மழை பெய்து கொண்டிருந்த வேளை இடிமுழக்கத்துடன் ஷெல் சத்தமும் தொடர்ந்து கேட்டதால் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் காணப்பட்டது சில குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. (இ-15-13-11)

பாதுகாப்பு...

1ஆம் பக்கத் தொடர்ச்சி] வைகள் அவசரமாகக் கூடியது.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா பாரிஸில் இருந்துவந்து சேராதபடியால் பதில் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கூட்டத்துக்கு தலைமை வகித்தார். [இ-4]

“ஒலிநகை”...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] ஏவுகணை தாக்குவதாக விமானி அலறினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் விமானத்துடனான தொடர்பு எதுவும் கிடைக்கவில்லை என்று பலாலி முகாம் தரைக்கட்டுப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தரையிலிருந்து சிலர் தாக்குவதைக் கண்டதாக விமானி தகவல் அனுப்பியதாக கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (இ)

நாளை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] சிறப்பாக நடத்த சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பேரணியில் பல்லாயிரக்கணக்கானோர் திரள்வர் என எதிர்பார்க்கப்படுவதால் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன. (ஐ)

நொச்சிமோட்டையில் வியாழனன்று

புலிகளின் தாக்குதலில் ஹெலி ஒன்று சேதம்!

ஸ்ரீலங்காப் படையினர் கடந்த வியாழனன்று நொச்சிமோட்டைப் பகுதியை நோக்கி முன்னேறி மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது —

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் படையினரின் விமானப்படை ஹெலிக்கொப்டர் ஒன்றுசேதமடைந்தது.

படை வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டது.

கடந்த வாரம் கட்டுமுறிவுக் குளம் இராணுவ முகாமை புலிகள் தகர்த்த சம்பவத்தின் போது படையினரின் ஹெலிகொப்டர் ஒன்றை சேதமாக்கினர் என்பது தெரிந்ததே.

இதற்கிடையில் —

அரசுத்தரப்பு முக்கிய பிரமுகர்களின் பாவனைக்கென இருந்த இரண்டு 'பெல் 412' ரக ஹெலிக் கொப்டர்களும் போர் முனைக்கு மாற்றப்பட்டுள்ளன.

வடக்கில் தீவிரமாகியுள்ள தாக்குதலால் மேலும் ஹெலிகொப்டர்கள் தேவையாகின்றன என்று இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளதை அடுத்தே இவை மாற்றப் பட்டுள்ளன. (ஸ)

படையினரின்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி[டன் என்று தெரிவிக்கப்பட்டது.

விமானச் சிதறல்களுக்கிடையில் சதைத் துண்டங்களாகக் காணப்பட்ட அரச படையினரின் சடலச் சிதறல்கள் கொண்ட இந்த யூரியா பொதிகள் "சீ-டான்ஸர்" கப்பல் மூலம் பருத்தித்துறைத் துறைமுகத்தில் இருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படும்

நேற்றைய தாக்குதலில் கொல்லப்பட்ட 54 பேரில் மூவர் பத்திரிகையாளர்கள். ஏனைய 51 பேரும் படையினர்.

இவர்களில் 30 பேர் ராணுவத்தினர், ஐவர் கடற்படையினர், 12 பேர் விமானப் படையினர், இருவர் பொலிஸார்.

வடபகுதி வான்பரப்புக்குள் 16 மணி நேரத்துக்குள் இடம்பெற்ற இரண்டாவது தாக்குதல் சம்பவம் இதுவாகும். நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது தாக்குதலில் 40க்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

நேற்றைய சம்பவத்தின் போது பலாலி விமானத் தளத்துக்கு ஏழு கிலோ மீற்றர் தூரம் இருக்கையில் விமானம் மீதான் தாக்குதல் இடம்பெற்றதாகவும் —

தாக்குதலுக்கு உள்ளான விமானம் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் வந்து கொண்டிருந்த சமயம் பலாலி விமான நிலையத்துடனான தொடர்பை இழந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை மாலை முதலாவது அவ்ரோ விமானம் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் பலாலிப் பகுதியில் விழுந்து நொறுங்கியது குறித்து விசாரணை நடத்துவதற்காக பலாலிக்குச் சென்று கொண்டிருந்த படை உயர் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவினரே நேற்றைய தாக்குதலில் விமானத்துடன் கருகி உயிரிழந்துள்ளனர்.

புலிகளின் இந்த ஏவுகணைத் தாக்குதல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி உள்ளன. (இ)

ஆலயங்களில்

கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

நாளை திங்கட்கிழமை அதிகாலை 4மணிமுதல் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும்

அருளுரையை பிரம்மஸ்ரீ ஸ்ரீ சிவ வைதிக நியானந்த சர்மாவும் சிறப்புரையை திரு. ச விநாயக மூர்த்தியும் வழங்குவார்.

தொடர்ந்து 45நாட்கள் மண்டலா அபிஷேகம் இடம்பெறும். (14)

இன்று

யாழ். மெய்கண்டார் ஆதீன 23ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ஞானப்பிரகாச தம்பிரான், சிறுத்தொண்ட நாயனார் குருபூசையும் குன்றக்குடி அடிகளார் நினைவு அஞ்சலியும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-45 மணிக்கு கலைப்புலவர் வீதியில் உள்ள திருவாசக மன்றத்தில் நடைபெறும்.

சிவகுருநாத பீடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமி, கலாநிதி க கனகராசா, திரு. க. மாணிக்கவாசகர், திரு. க. வாமதேவன், செல்வி ப. வைத்திலிங்கம் ஆகியோர் பங்குபற்றுவர். உரையரங்கு பண்ணிசை என்பனவும் இடம்பெறும். ஒ)

★ ★ ★

சன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய உற்சவத்தை ஒட்டி நடைபெற்று வரும் திருநெறிய தமிழ் இசை உரை அரங்கில் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திருமுறை இடம்பெறும்

இசையாளராக பிரம்ம ஸ்ரீ கே இராமநாதனும் உரையாளராக திரு. சோ பத்மநாதனும் கலந்து கொள்வர். (ஒ-14)

* * *

அகில இலங்கை சைவமன்ற பருத்தித்துறை கிளையினர் நடத்தும் சைவப் பெருவிழாவும் வட இந்து மகளிர் கல்லூரி புதிய அதிபர் செல்வி அன்னபாக்கியம் கனகரட்னத்தை பாராட்டும் விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். (ஒ 14-15)

விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 30

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெறவிருந்த கே. சி. சி. சி. கிண்ணத்துக்கான கிரிக்கட் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன.

அந்த ஆட்டங்கள் இன்று நண்பகல் 12.30 மணி முதல் நடைபெறும்.

இதேவேளை இன்று நடைபெற இருந்த இறுதிப் போட்டி அடுத்த மாதம் 7ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது (ஐ)

திருமுறை பெருவிழா

யாழ்ப்பாணம், ஏப். 30

கைதடி. ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம திருமுறைப் பெருவிழாவும். 'தமிழ் வேதத்திரட்டு'' நூல் வெளியீடும் பாராட்டு விழாவும் விற்பனையக திறப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு ஆசிரம மண்டபத்தில் நடைபெறும்.

இந்து சமயப் பேரவை தலைவர் திரு. நா முத்தையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஒ-14)

காங்கேசன் சிமெந்து ஊழியர் எழுத்துப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 30

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை தற்காலிக அலுவலக பணியாளர்களது உள்ளக பதவி உயர்வுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

தொழிற்சாலை ஊழியர்களின் சம்பள கொடுப்பனவுகள் மற்றும் நிர்வாக கடமைகளை நிறைவேற்றுவதற்கு இந்த தற்காலிக அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர் பதவி உயர்வுக்காக இந்த எழுத்துப் பரீட்சை நடைபெறவுள்ளது. (ஒ-14)

கொல்லப்பட்...:

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] ஆகியோரே இந்த மூவரும் ஆவர்.

இவர்களின் சடலங்களும் அடையாளம் காணப்படவில்லை. (இ)

1995 மே நாள்
மாபெரும் பேரணி
உழைக்கும் மக்களே இங்கு வளமுண்டு
எனவே வாழ்வுண்டு
வங்கி ஊழியர் ஒன்றியம்,
[36460]

1995
மே நாள்
கல்விச் சமூகம் தம் உரிமைகளை வென்றெடுக்க
மே நன்னாளைப் பயன்படுத்துங்கள்
உடுவில் தெல்லிப்பழை கல்விக்கோட்டம்
அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள்;
[சி/8513]

1995
மே நாள்
மாபெரும் பேரணி
அடிப்படை மனித உரிமைகளுடன், தமிழினம் சுதந்திரத்துடன்
வாழ்ந்திட தமிழினமே திரண்டு வா!
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
(சி/112)

[illegible] 30-04-95 [illegible]